Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 01 (12-02-1993) வெள்ளிக்கிழமை ஓசை 360

## துப்பாக்கி வைத்திருக்க அனுமதிபெறவும்

தமிழீழப் பிரதேசத்தில் வாழும் மக்களில் எவராவது தமது பிரத்தியேகப் பாவனைக்காக வேட்டுத் துப்பாக்கி, கட்டுத்துப்பாக்கி, கைத்துப்பாக்கி போன்ற எவ்வித துப்பாக்கிகளையும் வைத்திருந்தால் அவற்றைத் தம்முடன் வைத்திருப்பதற்கான அனுமதிப் பத்திரங்களை 28-02-93க்குமுன்னர் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் கேட்டுக்கொண்டுள்ளார். [8 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலிக் கடலில் உக்கிர மோதல்; கடற்படைப் படகு தீப்பற்றி எரிந்தது

## ஹெலிகொப்டரும் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

கிளாலிக் கடற்பரப்பில் நேற்றிரவு கடற்புலிகளின் ரோந்து அணியினருக்கும் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் பிரிவினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றதாக நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இம் மோதலின்போது சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான விசைப்படகு ஒன்று தீப்பற்றி எரிந்ததாகவும் மேலும் தெரிய வருகின்றது. இதேவேளை சிறிலங்கா கடற்படையினருக்கு உதவியாக விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்றும் தாக்குதலில் ஈடுபட்டது.

நேற்று இரவு 10.30 மணியளவில் பூநகரி, சங்குப்பிட்டி கடற்கரைப் பகுதியில் இருந்து புறப்பட்ட கடற்படையினரது படகுகளை கிளாலிக் கடற்பரப்பில் வைத்து வழி மறித்த கடற்புலிகள் கடற்படைப் படகுகள் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

நள்ளிரவுவரை கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் மோதல் நடைபெற்றதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையினருக்கு உதவியாக உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் நடாத்தியவண்ணமிருந்தது. இவ் உலங்குவானூர்தி பூநகரி படை முகாமில் தரையிறங்கி ஏறியதையும் அவதானிக்க முடிந்ததாகவும் தெரியவருகிறது.

இம்மோதலின் போது கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளாகிய கடற்படையினரது விசைப் படகு ஒன்று கடலின் நடுவே தீப்பிடித்து எரிந்துள்ளதாக [8 ஆம் பக்கம் பார்க்க]

## மாணவர் உணவு முத்திரை; பொருள் கையிருப்பு இல்லை

(யாழ்ப்பாணம்)

மதிய உணவு முத்திரைகள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தும் தற்பொழுது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப்பொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த உணவு முத்திரைகளுக்கு பொருள்கள் விநியோகிக்க முடியாமல் இருப்பதாக யாழ் செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் 1992 ஆம் ஆண்டின் ஒக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களிற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தற்பொழுது டிசம்பர் மாதத்திற் [8 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



வீரவேங்கை சத்தியபாலன் (டயஸ்)

மட்டக்களப்பு கல்சேனை எனும் இடத்தில் 26-1-1993 அன்று காலை 8-00 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை சத்தியபாலன்,/டயஸ் (கோகுலசிங்கம் குபேரசிங்கம், சின்ன ஊரணி, மட்டக்களப்பு) என்னும் விடுதலை புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.



வீரவேங்கை மணாளன் (நளன்)

மட்டக்களப்பு கிரான்குளத்தில் 08-02-1993 அன்று காலை 8-45 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை (மணாளன் / நளன் (கேசகப் போடி [8 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் தெரிவித்துள்ளார்.

## உள்ளே...

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத் தகைமைகளைப் பெற்று பரிசு பெறும் மாணவர் விபரம் உள்ளே வெளியிடப்பட்டுள்ளது.

## பத்திரிகைகளுக்கு எதிரான அரசின் நடவடிக்கை ஜனநாயக விரோத செயல்

### சிறிமாவோ கண்டனம்

(கொழும்பு)

சுதந்திரப் பத்திரிகைகளுக்கு எதிராக ஐ.தே.க. அரசாங்கம் மேற்கொண்டு வரும் செயல்கள் ஒரு ஜனநாயகப் படுகொலையாகும். இவ்வாறு அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் முதலாளித்துவப் பார்வை தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் "நாட்டின் பிரதான செய்தி நிறுவனங்களான ரூபவாகினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லேக்கவுஸ் பத்திரிகைகள் மூலம் பாரிய விளம்பரத்தை தேடிக்கொள்ளும் ஐ. தே. க. அரசாங்கம் சுதந்திரப் பத்திரிகைகளுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பது ஜனநாயகப்படுகொலை என்பதோடு இது நாட்டின் ஒற்றுமைக்கும் பங்கத்தினை ஏற்படுத்தும்" என்றார்.

அரசாங்கத்தின் ஜனநாயக விரோதப் போக்கிற்கு முட்டுக்கொடுத்து அரசாங்க தலைவர்களின் சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அரச அதிகாரிகளையும் அவர் எச்சரித்தார். குறுகியஅரசியல் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி, முல்லை, மணலாறு மாவட்ட தொழில் முயற்சிகளை பதிவு செய்யக் கோரிக்கை

வன்னி, முல்லை/மணலாறு, மாவட்டங்களில் வாணிபம்/தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தமது வாணிபம் / தொழில் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பதிவுக் கட்டணம் ரூபா 100 செலுத்திப் பதிவுசெய்து கொள்ளும்படியும், பதிவு செய்யாத எந்தவொரு வாணிபமும் தொழில் முயற்சியும் தொடர்ந்து நடாத்துவதற்கு இசைவளிக்கப் படமாட்டாதென்றும் வன்னி / முல்லை மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் நா. முத்தழகன்தெரிவித்துள்ளார்.

முல்லை மாவட்டத்தினர் 16 - 2 - 93 முதல் 18 - 2 - 93 வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையும் பாண்டியன் செயலகம், முள்ளைவீதி புதுக்குடியிருப்பிலும் வன்னி மாவட்டத்தினர் 19 - 2 - 93 முதல் 25 - 2 - 93 வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ். வீதி கிளிநொச்சியிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

வாணிபம்/தொழில் முயற்சி என்பது நிரந்தர வாணிபர்களை மட்டுமல்லாது நடமாடும் வாணிபர்களையும், தரகர்கள், போக்குவரத்துச் சேவை, பிரயாணசேவை. மற்றும் உயர்தொழில்,கண்ணியத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரையும் உள்ளடக்கும்.

## பொருளாதாரத் தடையை கண்டித்து பேரணி

பசி நெருப்பை வயிற்றில் சுமந்து பட்டினிச்சாவின் விளிம்பில்இருந்து பரிதவிக்கும் தமிழீழ மக்களுக்கு அரசினால் ஏற்படுத்தப்பட்டுவரும் உச்சக்கட்ட பொருளாதார நெருக்கடி நிலையை உலகெங்கும் எடுத்தியம்பும்வகையில்நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஊர்வலம் நடைபெற்றது.

புலோலி வணிகர் சங்கமும், மக்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தினர்.

மந்திகையில் இருந்து காலை 7.30 மணியளவில் ஆரம்பமான ஊர்வலம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை 9 மணியளவில் சென்றடைந்தது. சுமார் இரண்டு மைல் தூர ஆர்ப்பாட்டப் பேரணியில் பெண்கள்,ஆண்கள், வர்த்தகர்கள், பாடசாலை சிறுவர்கள் பலரும் கலந்திருந்தனர்.

பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்வந்தடைந்த பேரணி பிரதேச செயலரிடம் வர்த்தக சங்கத் தலைவர் திரு. கணேசராசா மகஜர் ஒன்றைக் கையளித்தார். [யோ]

## குடாநாட்டுக்கான பாதை மாற்று திட்டம்குறித்துபேச்சு

யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்திற்கு மாற்றுப் பாதையொன்றினூடாக பயணிகளை போக்குவரத்திற்கு அனுமதிப்பது பற்றி அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளுக்கும் அரசிற்குமிடையிலே பேச்சுக்கள் நடைபெறுவதாக சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் மேற்படி குழு விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையிலும் இது தொடர்பாக பேச்சுவார்த்தையினை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். மாவட்டத்தில் 36 பேர் 1992இல் நாய்கடித்து மரணம்

யாழ். குடாநாட்டில் நாய் கடியினால் சென்ற ஆண்டு இறந்தவர்களின் தொகை 36 என்றும் பிராந்திய மாவட்ட சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இக் காலப்பகுதியில் சுமார் 10,563 பேர் நாயினால் கடியுண்டுள்ளனர். இதில் கட்டாக்காலி நாய்களினால் சுமார் 1794 பேரும், வீடுகளின் வளர்ப்பு நாயினால் 8769 பேரும் கடியுண்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது. கடந்த சில வருடங்களை விட சென்ற வரும் அதிகளவு பேர் நாய்களினால் கடியுண்டதாகவும் இதற்கு காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து நெரிசலாக வாழ்வதினாலும், நாய்கள் கவனிப்பாரற்று இருப்பதாலுமே என்று கருதப்படுகின்றது.

சென்ற ஆண்டு மட்டும் விசர்நாய் தடுப்பு ஊசி 43,630 (A.R V Received mll நோயாளருக்கு ஏற்றப்பட்டுள்ளதாகவும், நாய்களுக்கு சுமார் 16 240 ஊசி ஏற்றப்பட்டதுடன், 6465 நாய்கள் கொல்லப்பட்டும் இருப்பதாக தெரியவருகின்றது. (நி)

## வரி விளம்பரம்

### பரிசளிப்பதற்கு மீரா பிரசுரங்கள்

இளைஞர்களின் மனதைக் கெடுக்காமல் அவர்களைச் சிந்திக்க வைக்கும் நாவல்கள்! விடியலைத் தேடி, அக்கினி, இலைத்தில் சில உள்ளங்கள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், கவடுகள்; விண்ணில் அல்ல விடிவெள்ளி (4260)

### தவறிவிட்டது

28-1-93 - 3-2-93 இடைப்பட்ட திகதியில் ஆலமிமேணியில் பிரயாணப்பை இரண்டு தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4261)

### தையல் அகம்

மங்களகரமான வைபவங்களுக்கு பெண்களுக்கான சாறி பிளவுஸ்கள், அலங்கார ஆடைகள், பாடசாலை மாணவருக்கான சீருடைகள், நவீன முறையில் குறித்த தவணையில் வேலை செய்து கொள்ள திலகா மகளிர் தையல் அகம், 163 நாவலர் வீதி, (மனோகரா தியேட்டர் சந்தி யாழ்ப்பாணம். (சி/5964

### கலண்டர்கள் விற்பனைக்குண்டு

விற்றுமுடிக்கும் நோக்குடன் திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம். 48 மணிநேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை. 330. காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (4173)

### சோதிடம்

ஜாதகம் எழுத, பலனறிய, கைரேகை, அதிர்ஷ்டமான பெயர் வைக்க விவாகப்பொருத்தம் பார்க்க, வேலணை சோதிடர் V. A சிவராசா 152 B அரசடி றோட் கந்தர் மடம் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சந்தியுங்கள். (4267)

### விற்பனைக்குண்டு

நல்லநிலையிலுள்ளவெற்றுப் பெட்டிகளும், வெற்று சீமெந்து பைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; மருந்து பாமா தனியார் வரையறுத்தது. 484 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (4269)

### மகாதேவா ஜோதிடம்

5-3-1993இல் சனிமாற்றம் இலங்கைக்கும்- உலகத்திற்கும் நடக்கவிருப்பது — விபரங்களுடன் வெளிவந்து விற்பனையாகின்றது தினசரி காலை 9.00 தொடக்கம், மாலை 6.00 மணிவரை சந்திக்கலாம். 140, செல்வர் வீதி கல்வியங்காடு நல்லூர். (4268)

### போத்தல்கள் தேவை

ஜாம், பியர், சோடியல் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது TASTE LINE INDUSTRIES, (Pvt) LTD, 14, SEENIOR LANE, JAFFNA. (சி-5989)

## கொடித்தினம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் சங்கத்தின் வருடாந்த கொடித்தினம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒரு வாரத்திற்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கொடித்தினத்திற்கான சகல ஏற்பாடுகளையும் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் மேற்கொண்டு வருகின்றார். (24)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானமன்றத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினரின் கருத்தரங்குத் தொடரில் இன்று யாழ்ப்பாணச் சமூக உருவாக்கம் — தேசவழமைச் சட்டத்தினூடான ஒரு தேடல் என்ற விடயத்தில் திரு ம செல்வின் உரையாற்றவுள்ளார்.

இக் கருத்தரங்கு இன்று மாலை 3.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழகப் பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

## குடிசைகள் அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்துள்ள ஆழியவளை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மேலும் 82 குடும்பங்களுக்கு, வதிவிடக் குடிசைகள், மாமுனையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ், கிளை இதனை அமைத்துவருகின்றது. (36)

## மட்டக்களப்பு நகரில் பொலிஸ் சோதனை தீவிரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிற்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் மீதான சோதனையைத் தீவிரப்படுத்தியுள்ளதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நகரிற்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் சகலரும் இரண்டு பிரிவினராக பொலிசாரினால் சோதனையிடப்படுகின்றனர்.

கல்லடிப்பாலத்தடியிலும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகிலும் உள்ள சோதனை நிலையங்களில் இரண்டு வரிசைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு வரிசையில் நகருக்குள் வசிப்பவர்களும் அடுத்த வரிசையில் நகருக்கு அப்பால் வசிப்பவர்களும் செல்லுமாறு அறிவிப்புப் பலகையில் எழுதப்பட்டுள்ளது

இதேவேளை மட்டிருப்பு பாலத்தடியில் பொதுமக்களிற்கான சோதனை முடிந்ததும் கால்மைல் தூரம்வரை அவர்கள் கால்நடையாகச் சென்றே வாகனங்களில் ஏற வேண்டும் என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## தேவை

1. மொழி பெயர்ப்பாளர்கள்:-
   ஆங்கிலம் - தமிழ்
   சிங்களம் - தமிழ்
2. தமிழ்வல்ல தமிழ் ஆசிரியர்கள்

**21. 2. 93 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்**

விள இல 183
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்.

(4264)

## Postgraduate Diploma in Public Administration

Applications are invited for admission to Diploma in public administration course. This is a one year Postgraduate Diploma course to be started from may this year 1993. The course is fee levying

Graduates with First or Second class Honours are eligible to apply; SLAS and other staff officers with five years service can apply. Age preferably under 45 Candidates in Government Service should apply through proper channel. Applicants should have English proficiency to follow the course

The relevant application forms can be obtained from the Senior Asst, Registrar / Academic after payment of fees of Rs 10 00 at the Finance Branch.

Please forward the application to Senior Asst. Registrar Academic Branch University of Jaffna Thirunelvely before 1993-3-10

Registrar
University of Jaffna
1993 02-11

(சி-5986)

## தெங்குபனம்பொருள்கூட்டுறவுசங்கங்களின் ஆளணித் தேவைகளை நிறைவேற்ற தொழில் வங்கி ஒன்று நிரப்புவதற்கான

## விண்ணப்பங்கள்

### பதவிகள்

1. வடிசாலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்,
2. வடிசாலை கொதிகலன், வடிகலன் இயக்குனர்.
3. கைத்தொழில் உற்பத்தி நிலையத்தின் பொறுப்பாளர்கள்.
4. வெல்ல நிலையப் பொறுப்பாளர்கள்.
5. உட்துறை எண்பார்வை பயிற்சியாளர்கள்.
6. கல்வி விரிவாக்க உத்தியோகத்தர்.
7. கணக்குப் பதிவாளர்.
8. கணக்கு இலிகிதர்.
9. தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர் [தமிழ்]

மேற்படி பதவிகளுக்கான கீழ்வரும் குறைந்த பட்ச தகுதி உடையோர் பதிவு செய்து கொள்ள விண்ணப்பங்களை 20-2-93 க்கு முன்பாக பொது முகாமையாளர் வடமாகாண தெ.ப பொ. கூ. ச சமாசம், இல 499, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.

### குறைந்த தகைமை

1. க. பொ. த. [சாதாரண] கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி.
2. துறைசார் அனுபவமும், கூட்டுறவுக் கல்லூரிப் பயிற்சியும், துறைக்குப் பொருத்தமான விஞ்ஞான பாடங்களில் சித்தி.

பொதுமுகாமையாளர்,

வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசம், 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5996)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-12

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா -பூவரசங்குளம் பகுதியில் தேநீர்க் கடைக்குள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு யாழ் - வல்லை பொலிகண்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தாய், 2 மகள்மார், பேரக் குழந்தை.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

லெப். சுரேஸ் (அன்ரனிராசா அன்ரனிலோறன்ஸ் சிலாவத்தை - முல்லைத்தீவு)

கமல்ராஜ் (சமான் சந்திரசேகரம் - தீர்த்தக்கரை - முல்லைத்தீவு)

1992 ஆம் ஆண்டு திருக்கோணமலை - மகிந்தபுரப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5985)

## யாழ்நகரில்:
# மனிதநேயமற்ற மருந்து வியாபாரம்

தனியார் சிகிச்சை நிலையத்தில் ஆங்கில வைத்தியர் முன்னே போய் நின்று உடல் நிலை சரியில்லை' என்று சொன்னாப்போதும், நோய்க்கு ஏற்ற மருந்து வகைகள், அவற்றைச் சாப்பிட வேண்டிய அளவு முதலியன அடங்கிய வைத்தியர் எழுதிக் கொடுக்கும் சீட்டைக் கொடுத்து ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் மருநது வாங்குவதென்றால் கை நிறையக் காசு வேண்டும். சதாரணமாக வைரஸ் கிருமிகளால் ஏற்படும் காய்ச்சலுக்கு பரிசிட்டமல் மற்றும் எளிய மருந்துகளே போதுமானவை. அதற்குக் கூட இந்தக் காலத்தில் மடியில் ஐம்பது ரூபாக் காசாவது இருக்க வேண்டும். இல்லாதுபோனால் ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள் கதவைச் சாத்திவிடும். அதிலும் டாக்டர் கடுமையான சுகவீனத்துக்கு அல்லதுபக்ரீறியாக்களால் தோன்றும் காய்ச்சலுக்கு உயிர் காக்கும் மருந்துகளையும் அன்டிபயட்டிக்ஸ் (antibiotics) மருந்து வகைகளையும் எழுதினால், மருந்துக் கடைகளில் அந்த மருந்துகளுக்கு யானை விலை. கயிறு ஊசியின் கண்ணில் நுழைந்தாலும் நுழையலாம். ஆனால் கையில் காசில்லாத நோயாளி மருந்து விற்பனை நிலையங்கள் பக்கம் தலை வைத்தும் படுக்க முடியாத நிலை.

ஒவ்வொரு நாளும் காலையில் கண் விழிக்கும் போதே பொருள்களின் விலை ஏற்றம் நம்மை எதிர்பார்த்துக் கிடப்பது இன்றைய நிலையில் எல்லோருக்கும் உள்ள பொதுவான வாழ்க்கை முறைதான். ஆனால் இந்த மருந்து விலை உயர்வு இருக்கிறதே, அது மாத்திரம் அலாதியானது. ஆகாசவாணம் போல் மருந்து விலை ஏன் ஏறவேண்டும் என்று மக்கள் மூக்கின் மேல் விரலை வைக்கிறார்கள். மருந்து வியாபாரிகளுக்கும் மனித நேயத்துக்கும் உள்ள தொடர்பு அப்துல் காதருக்கும், அமாவாசைக்கும் உள்ள தொடர்புதான் என்பதை மருந்து வியாபாரிகள் அன்றாடம் வியாபாரம் நடத்தும் குரூரத்தைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். எடுத்துக் காட்டாகDextrose 500M.L. என்னும் உயிர் காக்கும் ஊசி மருந்து பெரியகடை சத்திரச் சந்தியில் உள்ள பார்மஸியில் ஒன்று 500 ரூபா. விலையில் விற்பனையாகின்றது. ஏற்றுக் கூலி இறக்குக் கூலி என்ற ஒட்டுமொத்தமான செலவுகளைப் பார்த்தால் கூட 75 ரூபாவிலிருந்து 100 ரூபா வரையும் இந்த மருந்தை விற்கலாம் என்று சமூக உணர்வு கொண்ட ஒரு சில ஆங்கில மருந்து வர்த்தகர்கள் கூறுகிறார்கள். இது இபபடியெனறால், மற்றுமொரு உயிர்காக்கும் மருந்தான எத்ரோமைசின் மாத்திரை ஒன்றின் விலை 10ரூபா வழக்கம் போல் மருந்துக் கடைக் கர்மபீடத்தில் பணத்தைக் கொடுத்து இந்த மருந்து வகைகளைக் கொள்வனவு செய்ய முடியாது. சுழியோடித்தான் வாங்க முடியும்.

> நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி ஆங்கில மருந்து வர்த்தகர் தமது மனித நேயமற்ற மருந்து விற்பனைக்கொள்கையை நியாயப்படுத்த முடியாது.
>
> - மதன்

மருந்து வகைகளின் பொதுவான விலை அதிகரிப்பு ஒரு புறமிருக்க யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பார்மசிகள் மருந்துகளை விற்பனை செய்யும் விலை விசயத்தில் உள்ள பாரிய விலை வேறுபாடுகளின் மூலம் சில மருந்துக்கடைகளின்இரட்டை முகம் வெளிப்பட்டுள்ளது. உதாரணமாக, கியூமறிற் என்ற வியாபாரப் பெயரில் விற்பனையாகும் மருந்து இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணத்தில் சில மருந்துக்கடைகளில் தாராளமாகக் கிடக்கிறது. இது 100 ரூபாவில் இருந்து 150 ரூபா வரையிலான விலை வேறுபாட்டில் விற்பனையாகிறது.

சாதாரண சுகவீனத்துக்குப் பாவிக்கப்படும் விற்றமின் C வில்லை ஒன்று வைஜி மெடிக்கலில் 43 சதமாக விற்கப் படுகிறது இதே சமயம் கூப்பிடு தூரத்தில் உள்ள மற்றொரு மருந்துக்கடையில் விற்றமின் C 30 சதமாக விற்கப்படுகிறது. மேலும், சில கடைகளிலிருந்து பெறப்பட்ட விலை விபரங்கள் வருமாறு; தற்போதைய சூழ்நிலையில் ஒரு ரூபா எண்பத்தொன்பது சதம் பெறுமதியுடைய அம்பிசிலின் என்ற பிரபலமான மருந்து வைஜி மெடிக்கலில் ரூபா 3.50 சதமாகவும். அருகிலுள்ள ஒரு கடையில் ரூபா 2.75 சதமாகவும் விற்பனையாகின்றது. இந்த விற்பனையில் வைஜி மெடிக்கல் பெறும் இலாப நூற்று வீதம் 85 வீதமாகும் பக்கத்திலுள்ள மருந்துக் கடையின் இலாப நூற்று வீதம் 45 வீதம் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. உயிர்காக்கும் மருந்தான எத்தோமைசின் வாங்கிய விலை ரூ. 2.45 சதம். கோண்டாவில் சர்மிளா பார்மஸியில் இந்த மருந்து வில்லை ஒன்றின்விலை 6.00 ரூபா. இதே மருந்து வசந்தாஸ் பார்மஸியில் 10.00 ரூபா. இதனால் வசந்தாஸ் பெறும் இலாப நூற்று வீதம் 308 வீதமாகும். மருந்துத் தட்டுப்பாடு காரணமாகக் குறிப்பிட்ட மருந்துக் கடைகளில் மட்டும் கிடைக்கும் பி 12-10 சி.சி ஊசிமருந்து பார்மஸிகள் வாங்கிய விலை 18.00 ரூபா. இதே மருந்து பரணி ஆங்கில மருந்துச் சாலையில் 35-00 ரூபா. அதே வேளை வசந்தாசில் இது யானை விலை. 75.ரூபாவாக விற்பனையாகிறது. இந்த மருந்து விற்பனையில் பரணி 94 வீதமும், வசந்தாஸ் 316 இலாப நூற்று வீதமும் லாபமாகப் பெறுகின்றன. இரு கடைகளுக்குமிடையில் உள்ள நூற்று வீத இலாப வேறுபாடு 222 வீதமாகும். ஆனால் இவ்விரு பார்மசிகளுக்கிடையிலுள்ள இடைத்தூரம் 300 யாருக்கும் குறைவாகும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்என்பது போல் இவை சில உதாரணங்களாகும்.

குறைந்த பட்சம் மனித உயிர்கள் என்று கரிசனை கொள்ளாத அளவுக்கு ஒரு சில மருந்துக் கடைகளின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இந்த நெருக்கடி காலத்திலும் தன் உடன்பிறப்புகளையே

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கண்தானம் (EYE DONATION)

## ஒருவர் இறந்தபின்னரும் மீண்டும் இவ்வுலகை இன்னொருவர் மூலம் பார்க்க ஓர் அரிய வாய்ப்பு

மருத்துவத்துறை இதுவரையிலும் அடைந்துள்ளதும், தொடர்ந்து அடைந்து கொண்டிருக்கும் மருத்துவ, விஞ்ஞான முன்னேற்றத்தில், மனித உடலிலுள்ள பல்வேறு உறுப்புக்கள் அவன் உயிருடன் இருக்கும்போதும் இன்னொருவருக்கும், இறந்த பின்னர் கூட மண்ணோடு மண்ணாக, நெருப்போடு சாம்பலாக போகின்ற மிகவும் முக்கியமான உறுப்புக்களைத் தானம் செய்வதன் மூலம் ஓர் அங்கத்தை இழந்து அங்கவீனராகவோ, கண்பார்வை இல்லாதவராகவோ அல்லது நிரந்தரமான நோயாளியாக இருப்பவருக்கோ ஒரு புதிய வாழ்வை, அவர் வாழப் போகின்ற எஞ்சிய வாழ்நாட்களை நோயின்றி அல்லது இழந்த பார்வையை மீண்டும் பெற்று வாழ வைப்பது எஸ்பது வாழ்க்கையில் ஒருவர் செய்யக் கூடிய அதிஉயர்ந்த உன்னதமான செயற்பாடுகளில் ஒன்று என கருதப் படல் வேண்டும்.

### "தானம்" (Organ Donation) செய்யப் படக் கூடிய உறுப்புக்கள் எவை

இதுவரையில் மருத்துவத்துறையில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக விஞ்ஞான ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில், உடலிலுள்ள அதிநுட்பமான, உன்னதமான உறுப்புக்கள் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு ''மாற்றீடு'' செய்யப்படக் கூடிய வளர்ச்சி காணப்பட்டுள்ளது. அதாவது மனித உடலிலுள்ள இருதயம், ஈரல், சுவாசப்பைகள், கண், எலும்பு, எலும்பு மச்சை, தோல், சிறுநீரகம், தலைமுடி எனப் பல உறுப்புக்கள் மாற்றீடு செய்யப்படக் கூடியன.

### மூன்று வகைஉறுப்பு மாற்றீடு

**(1) ஆட்டோ கிராவ்ற் (AUTO-GRAFT)**

ஒருவருடைய உடலிலுள்ள எலும்பை நோய் காரணமாக அல்லது விபத்துக்கள், விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல், துப்பாக்கிச்சூடு போன்றவற்றால் சிகிச்சை அளிக்கப்பட முடியாதளவுக்கு முறிந்தோ, சிதைந்து போகும் பட்சத்தில் முக்கியமில்லாத எலும்பை முக்கியமான இடத்திற்கு மாற்றிப் பொருத்துவது ஆகும். உடலில் எரிகாயங்கள் ஏற்பட்டு தோலின் பெரும் பகுதி புண்ணாகி விடும்போது உயிரைக் காக்கவும், உடலின் புற உருவத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காகவும் ஒரு பகுதியிலுள்ள தோல் மாற்றுச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதேபோன்று இரத்தப் புற்றுநோய் ஏற்படும் சிறுவர்களுக்கு இரத்தம் உற்பத்தி செய்யும் உறுப்பாகிய 'எலும்பு மச்சை' மாற்றீடு செய்யப்படுகிறது. தலைமுடி இல்லாத வழுக்கைப் பகுதிக்கு முடி அடர்த்தியாகவுள்ள இடத்திலிருந்து மாற்றீடு செய்யப்படுகிறது.

**2) ஹோமோகிராவ்ற் (HOMOGRAFT)**

இது ஒருவரிலிருந்து donor இன்னொருவருக்கு recipient செய்யப்படுவது இங்கு தான் ஒருவர் செய்யும் உறுப்புத்தானம் இன்னொருவரின் உயிரைக்காக்கிறது உதாரணமாக விபத்தின் மூலம் அல்லது நோய் மூலம் பார்வை இழந்தவருக்கு இறந்தபின்னர் ஒருவர் தனது கண்ணை அதிலும் cornea என்கிற பகுதியை மட்டும் தானம் செய்வதால் அவர் மீண்டும் பார்வை பெறுகிறார். சிறு நீரகத்தில் காயங்களினால் trauma அல்லது நோய்களினால் பாதிக்கப்படும் போது சிறுநீரகம் மாற்றீடு செய்யப்பட்டு அவருடைய உயிர்காக்கப்படுகிறது உதாரணமாக எம். ஜி. ஆருக்கு அவருடைய உறவினரிடமிருந்து சிறுநீரகம் மாற்றீடு செய்யப்பட்டது இவ்வாறே இருதயநோயினால் பாதிக்கப்பட்டவருக்கு ஒருவர் இறக்கும்போது செய்யப்படும் தானம் அவருக்குப் பொருத்தப்பட்டு நோயிலிருந்துகாப்பற்றப்படுகிறார். இவ்வாறே ஈரலில், காயங்கள் ஏற்பட்டு சத்திரசிகிச்சை அளிக்கப்பட முடியாதளவுக்கு காயங்கள் அல்லது நோய்களினால் பாதிப்படையும் போது ஒருவருடைய ஈரல் இன்னொருவருக்கு மாற்றீடு செய்யப்படுகிறது. இதுபோன்று நுரையீரலும் மாற்றீடு செய்யப்படுகிறது.

**3) ஹெட்டரோகிராவ்ற் (HETEROGRAFT)**

இது ஒரு விலங்கிலிருந்து சில முக்கியமான உறுப்புக்கள் மனிதனுக்குப் பொருத்தப்படுகிறது உதாரணமாக guerrilla என்கிற மானிடக் குரங்கின் ஈரல் மற்றும் சதையீ பாதிக்கப்பட்டுள்ள நீரழிவு நோயாளிகளுக்கு பன்றியின் சதையீயிலுள்ள சில முக்கியமான பகுதி மாற்றீடு செய்யும் முயற்சி நடைபெறுகிறது.

### கண்தானம் (EYE DONATION)

மனிதனுடைய மிகமுக்கியமான உறுப்புக்களில் கண்ணும் முக்கியமானதென்பதில் கருத்து முரண்பாடு இருக்க முடியாது அதேபோன்று மனிதனுடைய ஐம்புலன்களிலும் மிகமிக முக்கியமான புலன்பார்வை என்பதையும் எல்லோரும் அறிவர். கண்பார்வையை இழந்தவர்வாழ்க்கையையேஇழந்தவர் என்றுகருதப்படுவதும் வழமை. எனவே நாம் ஒவ்வொருவரும் [உயிரோடு இருக்கும் போது கண்தானம் செய்ய வேண்டிய அவசியமில்லை.] இறந்த பின்னராவது, எமது கண்களை ''தானம்'' செய்வோம் என்கிற எண்ணம் ஏற்பட்டால் நாம் என்றோ ஒருநாள் விபத்தினால் திடீரென்றோ, அல்லது நோய் வாய்ப்பட்டோ இறக்கும் போது இறந்து விட்ட எமது உடலை எரித்து சாம்பலாக்கும் போது, அல்லது மண்ணில் புதைத்து மண்ணாக்கும் போது எமது கண்களும் நெருப்பில் கருகி சாம்பலாகுவதைவிட, மண்ணுடன் மண்ணாகுவதைவிட அதனை தானம் செய்வதன் மூலம் ஏதோ ஒரு காரணத்தால் அதுவும் குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் விமானக் குண்டு வீச்சினாலும், ஷெல்தாக்குதலினாலும் துப்பாக்கிச்சூட்டினாலும் கண்களில் காயங்கள் ஏற்பட்டு திடீரென கண்பார்வை இழந்து குருடானவர்களுக்கு இறந்த பின்னர் நாம் வழங்கும் எமது கண்- அவர்களுக்கு மீண்டும் ஒளியையும் வாழ்வையும் அளிக்கும்.

### கண்தானத்திற்கு என்ன செய்யவேண்டும்?

கண் என்பது ஸ்க்கிளீரா, கோனியா ரெற்றினா, ஒப்ட்டிக்ஸ் டிஸ்க் என பல பகுதிகளைக் கொண்டது. இவற்றில் கோனியா என்கிற பகுதியே ஒருவரின் கண்களில் பழுதடைவதும் அதனால் பார்வை இழப்பதும் இந்தப்பகுதியே ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மாற்றீடு செய்யப்படுகிறது. இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விடயமென்னவெனில் ஒருவர் இறந்து 24 மணி நேரத்திற்குள் இந்த கோனியா என்கிற பகுதி இறந்த உடலிலிருந்து எடுக்கப் படல் வேண்டும். அல்லது அது பழுதடைந்துவிடும் அதுவும் இன்றைய போக்குவரத்து, மின்சார வசதியில்லாத சூழ்நிலையில் இது மிகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும் கண்தானம் செய்ய விரும்புபவர் வயது வந்தவராயின் தன்னுடைய சம்மதத்தை எழுத்து மூலமாக யாழ் போதனா வைத்தியசாலையில் பணிப்பாளரிடம் அல்லது கண்சிகிச்சை நிபுணரிடம் அறிவிக்கலாம். வயது குறைந்தவர்களாயின் தாய், தகப்பன் அல்லது மேற்பார்வையாளர் எழுத்து மூலமாக கண்தானத்திற்குரிய சம்மதத்தைத் தெரிவிக்கலாம். அத்துடன் வீட்டிலுள்ளவர்களுக்கும் இதுபற்றி அறியப்படுத்துவது நல்லது இல்லாவிடின் சம்மதம் கொடுத்தவர் இறந்த பின்னர் சம்பந்தமில்லாதவர்கள் பெரும்ரகளையே ஏற்படுத்துவார்கள். சம்மதம் கொடுத்தவர் இறந்தவுடன் ஏவ்வளவு விரைவாக வைத்தியசாலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவருடைய உறவினர்கள் நண்பர்கள் அறிவிப்பதன் மூலம் இறந்தவர் மீண்டும் இவ்வுலகை இன்னொருவர் மூலம் பார்ப்பார்.

**சீர்மாறன்**

சிறுகதை

# நியாயம்

- இளையவன்

"இப்படி இருந்தென்ன செய்கிற பிலோமினா உழைச்சால்தானே குஞ்சுகளைப் பசி கிடக்க விடாமல் பார்க்கலாம். அதுதான் நான் பிலிப்பண்ணன்ர படகில போவப் போறன்"

விடிவெள்ளி கிழக்குவானில் எழும்பத் தொடங்கியிருந்த அந்தப் பொழுதில் பிரான்சிஸ் தன் மனைவி பிலோமினாவுக்கு கூறினான்.

"பயமில்லையே அப்பா" பிலோமினாவின் கேள்வியில் பதற்றம் இருந்தது. இரவின் இருளைத் தவிர்த்துவிட சுடர் விடும் குப்பி விளக்கின் ஒளியில் அவளது முக மாற்றத்தைப் பிரான்சிஸ் நன்கு அவதானித்தான்.

"என்ன பயம். ரோலரில ஆழ்கடலுக்கே போய்த்தொழில் செய்து வந்த எனக்கு இது கரைக்கடல் தொழில தானே. இதில என்ன பயப்பிடக் கிடக்கு"

"இல்லையப்பா... ஆமி... கடலடங்கு சட்டம் அது தான்" பிலோமினா இழுத்தாள்.

"இங்க பார் பிள்ளை... உதுகள் எல்லாத்துக்கும் பயந்து போய் வீட்டுக்கை இருந்தா கடைசில பட்டினியில தான் என்ர குஞ்சுகள் சாக வேண்டி வரும்" நீ ஒண்டுக்கும் யோசியாதை உங்கை எல்லாரும் தானே போகினம். நானும் பிலிப் பண்ணன்ர படகில போகப் போறன்" என்றான் பிரான்சிஸ் உறுதியாக.

"சரி.. கவனமாய் போட்டு வாங்கோ" என்றவள் எழுந்து சென்று குசினிக்குள் புகுந்தாள்.

பிரான்சிஸ் கிணற்றடிப் பக்கமாகப் போய் கை, கால் எல்லாம் அலம்பிக்கொண்டு ஈரம் துடைத்தபடி வரவும், பிலோமினா தேநீர் கோப்பையை நீட்டவும் சரியாக இருந்தது.

அவன் தேநீர்க்கோப்பையை வாங்கி உறிஞ்சக் குடித்துக் கொண்டிருந்த அந்தக் கணப்பொழுதுகளில பிலோமினாவின் மனம் பின்நோக்கிப் பார்த்தது.

கட்டுபஸ்தான தேகக் கட்டும், கழுத்தில் தங்கச் சங்கிலி பளபளக்க விரல்களில் அணிந்திருந்த மோதரத்தின் மினுமினுப்பில் மேனியின் கறுப்பு நிறம் மறைந்து போக இளமையில பிரான்சிசைக் கண்டு மனதைப் பறிகொடுத்த அந்த நாட்கள் மின்னலிட்டது.

அவன் சொந்தமாகத் தொழில் செய்த காலத்தில் "சம்மாட்டி.. சம்மாட்டி" என்று வாய்க்கு நூறு தரம் கூப்பிட்டுக் கொண்டு தொழிலாளர்கள் சுற்றி வந்த காட்சி கண்ணில் வந்தது.

நாட்டில் எங்கெங்கோ நடந்த ஏதேதோ சம்பவங்களின் பாதிப்புகள் ஏற்படுத்திய தாக்கங்கள இந்த வீட்டிலும் தெரிந்தது.

ஆழ் கடலுக்குப் போன பிரான்சிஸின் ரோலர் நடுக்கடலில திடீரென வந்து மோதிய 'ஷெல்' ஒன்றினால் மூழ்கடிக்கப்பட தொழிலாளர்கள் இரண்டு நாட்களாக நீந்திக் கரை சேர்ந்தனர்.

"பிளாஸ்ரிக்போட்" வாங்கி "நைலோன் வலைத்" தொழிலுக்கு முதல் போட்டான் பிரான்சிஸ். ஆனால் நேவிக்காரர் வலையைப் பறிச்சுப் போட்டாங்கள். எங்களுக்கும் செமத்தியான அடி உதை எனக்கூறி முதுகையும், மார்பையும் காட்டியபடி வந்து சேர்ந்தனர் தொழிலாளர்.

இந்த ஒவ்வொரு சம்பவத்திலும் அவனது கையிருப்புகள் கரைந்து போக இப்போது வேறொருவரின் படகில் இவன் பங்குத் தொழிலுக்கு போறதை நினைக்க பிலோமினாவின் கண்கள் கலங்கின.

"ஏன்... பிள்ளை ...தொழிலுக்கு வெளிகிடேல்ல அழுகிறாய்" பிரான்சிஸ் குழைந்தான் "அது... வந்து ஒண்டுமில்லையப்பா" என்றவள் கூறவும் தன் சுட்டுவிரலை நீட்டி கன்னத்தில் வழிந்த அவளது கண்ணீரைத் துடைத்து விட்டு "கவலைப்படாமையிரு.. நான் போட்டு வாறன்... பிள்ளையள் கவனம்" என்றபடி விரைந்தான்

"அண்ணை... பிரான்சியண்ணை" என்று படலையருகே குரல் கேட்கவும் இப்ப தான் வெளிக்கிடுக் கடற்கரைப்பக்கமாப் போட்டார் என்ற பிலோமினா 'நீங்களும் தொழிலுக்கு தானோ"

'ஓம் பிள்ளை எத்தினை நாள் தான் வீட்டுக்கையே கிடக்கிறது நேரம் போகுது வாறன்போட்டு" என்றபடி நடந்தார் சவுரிமுத்து.

★ ★ ★

"அம்மா பாப்பா" என்ற உரத்த குரலோடு கண் விழித்தாள் மரியசீலி பிரான்சிஸ் தொழிலுக்கெனப் புறப்பட்டு விட்ட அக்காலைப் பொழுதிலிருந்து நித்திரையே வராமல் அப்படியும் இப்படியுமாய் புரண்டுகொண்டிருந்த பிலோமினா சற்றே கண் அயரத் தொடங்கியிருந்த வேளையில் மரியசீலியின் குரல் அவளைத் திடுக்கிட்டெழ வைத்தது

"பாவம்.. பிள்ளை பசிக்குதாக்கும்" என நினைத்துக் கொண்டவள் எழுந்து அவளை வாரி அணைத்து முத்தமிட்டு விட்டு 'முற்றத்தில வாளியில தண்ணியிருக்கு முகம் கழுவிப்போட்டு வாங்கோ... அம்மா தேத்தண்ணி தாறன்என்ன'' ' என்றாள். சின்னச் சின்ன கால்களை எடுத்துவைத்து மூன்று வயதும் நிரம்பாத மரியசீலி நடக்கும் அழகை ரசித்தவள் "என்ரை பிள்ளைக்கு என்னாலேயே நாவூறுபடப் போகுது" என நினைத்துக் கொண்டாள்.

இந்தப் பேச்சுக்குரல்கள் கேட்டதாலோ என்னவோ சிறுமியான மேரி யசிந்தாவும் மூத்தவனான ஸ்ரீபனும் கண் விழித்துக் கொண்டனர் குழந்தைகள் அனைவரும் கண்விழித்தும் படுக்கையை விட்டெழுந்த பிலோமினா முகத்தைக் கழுவுங்கோ, பிள்ளைகளுக்கு தேத்தண்ணி தாறன் எனக் கூறிக்கொண்டு குசினிப் பக்கமாக நடந்தாள்

ஸ்ரீபனும், யசிந்தாவும் உமிச்சாம்பலை எடுத்துப் பல் விளக்கிய படி கிணற்றடிப் பக்கமாக நடந்தனர். விடிந்தும் விடியாததுமான இருள் சூழ்ந்த கருக்கல பொழுதில் தூரத்தே மிக உயரத்தே படபடக்கும் ஹெலிக்கப்டரின சத்தங்கள் பிலோமினாவுக்கு தெளிவாகக் கேட்டது "பிள்ளையள் கிணத்தடிப் பக்கம் போகாதையுங்கோ. இங்க வாங்கோ தண்ணியிருக்கு" என்று குரல் கொடுத்துக் குழந்தைகளை அழைக்கும் அதனிடையில ஹெலிகப்டரின இரைச்சல் சத்தம் பலமாகக் கேட்கவும் "ஸ்ரீபன் அம்மா ஹெலி வருகுது" என்றான் அண்ணாந்து பார்த்தபடி அண்ணா வீட்டுக்குள்ள வாங்கோ" ஹெலி பதியுது வட்டம் போடுது என்றாள் யசிந்தா டேய் ஸ்ரீபன்...கெதியா ஓடியாடா.. என்ன வேடிக்கையே பார்க்கிறாய்என்றாள் உரத்த குரலில் பிலோமினா அது எங்கையோ போகுது நீங்கள் ஏன் இப்படி பதறுறியள் எனக் கேட்டுக் கொண்டு வீட்டுக்குமுன்பாக இருந்த பூவரசமரத்தின கீழ ஒதுங்கிக் கொண்டான் ஸ்ரீபன்

'ஹெலி.. சட ...சடவென வேட்டுக்களைத் தீர்த்தது" அயலட்டையில் இருந்த சனமெல்லாம் விழித்துக் கொண்டதுடன் எந்தப பக்கத்தில். எந்த இலக்குகள் நோக்கி ஹெலி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொள்கிறது என்பது தொடர்பாக பலவித விமர்சனங்கள் அரங்கேறின கூட்டமாய் சனம் நிக்கிறதைக் கண்டால் இங்கயும் சுடப் போறான்" கத்தினாள்பிலோமினா

பாலாவிக்கரைக்கு அங்கால கடலில தான் போல... ஒருவர் உரத்த குரலில் தன் கண்டு பிடிப்பை வெளியிட்டார்.

பிலோமினாவுக்கு நெஞ்சு திக்கென்றது.

★ ★

"மண்டை தீவுக்கு கிட்ட கறுத்த உடு போட்ட வந்த ஆமிக்காறங்கள் தொழிலுக்கு போனவையளை வெட்டிப் போட்டாங்களாம்" என்றபடி கடைத்தெருவுக்கு பாண் வாங்கப் போய் வந்த ஸ்ரீபன்.

"என்னடாசொல்லுறாய்" என்றாள் பிலோமினா திடுக்கிட்டு.

"சவரிமுத்தர் நீந்திக் கரைக்கு வந்திட்டாராம"

அவர்தான் சொன்னவராம் "என்னடா சொன்னவராம்"

"கறுப்பு உடுப்போட வந்தவனுகள சிங்களத்தில ஏதோ பேசிக்கொண்டு போட்டில போனவையளை வெட்டினவங்களாம். சவரிமுத்தர் கடலில குதிச்சு நீந்தி வந்தவராம் அவரோட வேற ஆக்களும் நீந்தினவையாம் ஆனா அப்படி நீந்தினவைக்குத்தான விடியப்புறம் ஹெலி சுட்டதாம்" என்று ஸ்ரீபன் கூறிக் கொண்டே செல்ல பிலோமினா நிதானமிழந்தாள். கையிலிருந்தவற்றை அப்படியே போட்டு விட்டு எழுந்தோடினாள் கடற்கரைப் பக்கம் நோக்கி கடலின் எல்லைகளை நோக்கிப் பார்வையை எறிந்தபடி "ஐயோ என்ர ராசா... உனக்கென்ன ஐயா நடந்தது" "ஐயோ... நீயும் போட்டால் என்ர குஞ்சுகளை ஆரையா பாக்கிறது" என்றவாறான பலவிதக்குரல்கள் கரைக்கடல்பக்கமெங்கும் வியாபித்திருந்தது.

இளம்தாய்மார்கள் முதல் குடுகுடு கிழவிகள். குழந்தைகள் மற்றும் பெண்கள், ஆண்கள் எனக் கடற்கரையெங்கும் சனம திரண்டிருந்தது அவரவரது முகங்களிலும் தம்மவர் ஒருவரை இழந்துவிட்டோமா என்ற ஏக்கம்.

"கொஞ்சம் பொறுங்கோ.. போட் ஒண்டு போட்டுது. போன ஆக்களைப் பார்த்து வர" என்றார் ஒருவர்.

"ஆமி போட். ஆரார் போகினம்" என்றார் அங்கிருந்த மற்றுமொருவர்.

"இவன் அலெக்சிட போட் தான் போனது; சவரி மீக்கேஸ் சிமியோன், பேதுரு, பாண்டியன். பேதுராசா எல்லாரும் போகினம்"

★ ★ ★

குருநகர் வாசிகசாலைக்கு முன்னுக்கு போடப்பட்டிருந்த பச்சைத் தென்னோலைக்கு மேலாக சுமார் முப்பதைந்து உடல்கள் அடுக்கப் பட்டிருந்தது.

சிலவற்றிற்கு தலை இருக்கவில்லை. சிலவற்றுக்கு கை இருக்கவில்லை உடலெங்கும் வெட்டுக் காயங்களும் கத்திக் குத்துக்காயங்களும் ஒவ்வொன்றும் ஊதிப்பெருத்து பார்க்கும் அந்தக் காட்சியே கோரம் நிறைந்ததுவாய் அழும் குரலால் அந்தப் பிராந்தியம் அதிர்ந்து கொண்டிருந்தது

கறுப்பு உடுப்போட வந்த வங்கள் வாளால வெட்டினவங்களாம்.. பயனைட்டால குத்தினவங்களாம் குதிச்சு நீந்தி வந்தவையளை கெலி துரத்தி துரத்தி சுட்டதாம். "இவ்வளவும் தானோ அல்லது இன்னும் இருக்குமோ. என்றார் ஒருவர் 'நீந்திக் கொண்டிருக்கேக்கை சூடுபட்டுச் செத்திருந்தால் கடலில பொடி மிதந்து வரும்" என்றார் மற்றுமொருவர்பதிலாக.

★ ★ ★

இவர்களுக்கு இடையில் பிரான்சிஸ் இருந்துவிடக் கூடாதே என்று பலமான வேண்டுதலுடன் அவ் இடத்திற்கு வந்து சேர்ந்த பிலோமினாவின் கால்கள் அடுத்த அடியை எடுத்து வைக்கவே தயங்கின பிலோமினா 'பிரான்சிசும்பிலிப்பண்ணன்ர போட்டில தான போனவர்" என்றார் அங்கிருந்த ஒருவர்.

குரலெடுக்காமலே தலையை அசைத்து பதிலளித்த அவள் "ஐயோ என்ரை ராசாஎன்று கூவக் கொண்டோடினாள்"

கோரமாகச் சிதைந்து போயிருந்த உடலின் தலைப் பகுதியை தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு கதறினாள்.

மண்டைதீவுக்கு அருகே பயங்கரவாதிகளின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக இலங்கை வானொலி முழங்கியது பிரான்சிஸின் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டதை அறிந்து ஸ்ரீபனை மட்டுமல்ல அவனோடொத்த பலரை இப்போது ஊரில் காண முடியவில்லை.

இரத்தத்திற்கு இரத்தம் பழிவாங்காமல் விடக்கூடாது ஒன்று பழிக்குப்பழி இரத்தத்திற்கு இரத்தம. பழிக்குப்பழி பழிவாங்காமல் விட்டால் அவரின்ரை ஆன்மா கூட சாந்தியடையாது என்றுதான் பிலோமினா இப்போது கூறிக் கொண்டிருக்கிறாள்.

## வரலாறு படைக்கிறோம்!

மேகத்தைக் கிழித்து.. மேலெழும்பிச் செல்லும்
வேகத்தைக் கொண்ட தமிழர்நாம் என்பதனால்
சோகத்தைக் கண்டு சோராமல் நம்பணியை
தாகமுடன செய்து வரலாறு படைக்கின்றோம்!

ஈழத்து மண் இழிவான மண்ணல்ல
ஆழச் செறிந்து வேரோடும் ஆல் போல்
நாளையச் சந்ததிக்கு நாமிங்கு படைக்கின்ற
சீலமுறு போர்ப்பரணி சிறப் பேற்றும!

மண்ணில் மலர்ந்து மணமேற்றும் மலரெல்லாம்-இங்கே
பெண்ணின் கூந்தலுக்கோ... கோயிலுக்கோ
போவதில்லை;
கண்ணென மண்ணைக் கருதியே களத்திலிருந்து
விண்ணேகும் மாவீரர் கல்லறைக்கே தினம்போகும்!

கண்ணீர் விட்டுக் கதறுவது கோழைசெய்யும்
வீண்பணி என்பதை உணர்ந்தே வீறுடன்
தண்ணீரைப் போலத் தமிழீழப் பயிருக்கு
செந்நீரை விட்டு வளர்ப்பதெம் செயலாகும்!

புலிக்குட்டி கூடப் புறம்பாடப் புறப்பட்டு
தளிர்க்கரம் தன்னில் துவக் கேந்தும்..
கலிங்கத்துப்பரணிக்குக் காலான சோழன்போல்...
துலங்கிடும் தலைவன்.. எம் தலைவன்!

கடலின் தொலைவெல்லாம் காவல் இருந்தெம்
படகில் வருமக்கள் உடல்களைத் துண்டாக்கி...
அடம் புரியும் சிங்களப் படைகளின்
தடத்தினை அழித்து... தமிழீழம் அமைப்போம்!

- கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# வெட்ட வெளியில், கொட்டும் பனியில் ஒரு உரிமைப் போராட்டம்

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி; அதிகாலை நேரம்; இசுரவேலின் எல்லைக்கு அண்மித்த தென் லெபனான்பகுதி; இசுரவேலால் தன்னுடைய பாதுகாப்பிற்கென தானாகவே பிரகடனம் செய்த பாதுகாப்பு வலயத்தின் முடிவிடம்; ஆடுமாடுகள் போல் அடைக்கப்பட்டு ஆறு ட்ரக் வண்டிகளில் கண்கட்டப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட்ட 417 பாலத்தீனியர் நாடுகடத்தப்பட்டவர் என்ற முத்திரை குத்தி அப்பகுதியுள் இறக்கி விடப்படுகின்றனர். லெபனானுக்கு இவர்கள் செல்ல வேண்டும். ஏற்கனவே 1987ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறு நாடுகடத்தப்பட்ட 66 பாலத்தீனியரை லெபனான் ஏற்றிருக்கின்றது. எனவே இம் முறையும் அவ்வாறு நிகழும் என எதிர்பார்க்கப்பட்டது. நாடுகடத்தப்பட்டவர் ஐந்து கிலோ மீற்றர் இராணுவ சூனியப் பகுதியைக் கடந்து லெபனான் இராணுவ காவல் நிலைகளை அடைகின்றனர். இம்முறை வழமைக்கு மாறாக டாங்கியொன்றும் கவசவாகனங்களும் முன் நிற்கின்றன. லெபனான் இராணுவ அதிகாரி இம்முறை லெபனானுக்கு வரும் அனுமதிக்கப்படார் என்றும் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திரும்பிச் செல்லுமாறும் பணிக்கிறார். முதலில் பாலத்தீனியர் மறுத்தனர். பலாத்காரம் பயன்படுத்தப்படும் என்று எச்சரிக்கப்படவே இவர்கள் மீண்டும் இசுரவேலின் இராணுவ எல்லைகட்கு திரும்புகின்றனர். அங்கும் இதே கதைதான். எச்சரிக்கையோடு மட்டுமே இசுரவேலியர் நிற்கவில்லை குண்டுகள் தலைக்கு மேலாகப் பறக்கின்றன. இருவர் காயமடையவே வேறு வழியின்றி இரண்டு இராணுவத்திற்கும் இடையில் தமது நிலையை எண்ணி நொந்தவாறு இம்மக்கள் அவ்விடத்திலேயே தரித்தனர். அன்றிலிருந்து ஒரு புதிய நூதனமான போராட்டம் தென்பகுதியில் மையம் கொள்கின்றது. உலகின் கவனம் முழுமையாக இப்பகுதி நோக்கி ஈர்க்கப்படுகின்றது.

இம் மக்கள் ஒவ்வொருவரிடமும் தொடக்கத்திலிருந்தது ஒரு கம்பளிப் போர்வையும் சிறிதளவு உணவும் இசுரவேலியர் கொடுத்த 50 டொலர் பணமும் தான் பின்னர் இவர்கள் நிலைகொண்டு செஞ்சிலுவைச் சங்கம் கூடாரங்கள், போர்வைகள் போன்றவற்றை அனுப்பியது இவற்றைக் கொண்டு பனித்தூள் எவருமற்ற கடும் பனியால் மூடப்பட்ட இவ் இராணுவ சூனியப் பகுதியில் தற்காலிக குடியிருப்பொன்றை இம்மக்கள் உருவாக்கினர். தம்மைத் தமது தாயகத்திற்குத் திரும்பப் போக அனுமதிக்கும் வரை தாங்கள் எங்கும் போகப்போவதில்லையெனவும் எவர் அனுப்பும் மனிதாபிமான உதவிகளைக் கூட தாம் பெறப் போவதில்லையெனவும் அவ்வாறு பெற்றால் உலகம் தம்மை மறந்து விடும் கவனத்தை மாற்றிவிடும் என மிகப் பிடிவாதத்தோடும் உறுதியோடும் கூறும் இம்மக்கள் மனோபலம் வியக்கத்தக்க மாற்றங்களை இன்று ஏற்படுத்திவருகின்றது. தென் லெபனான் பகுதியிலுள்ள கிராமவாசிகள் சிலர் கடத்தி வந்து அளிக்கும் உணவே இவர்கள் உயிர்வாழ உதவுகின்றது.

மிக மோசமான காலநிலை, வெட்டவெளி, வெளித்தொடர்பு எதுவுமில்லை குடிக்க நன்னீரில்லை எனினும் அருகிலோடும் சிறிய அருவி இவர்கள் தாகத்தை தணிவிக்க, உடலைக் கழுவ உதவுகின்றது. 1 1/2 மாதத்திற்கு மேலாக உறுதியோடு தொடரும் இம் மக்களின் போராட்ட பின்னணி மிக முக்கியமானது.

1967-ம் ஆண்டில் இசுரவேலியர் இவர்களின் தாயகப்பகுதியான மேற்கு யோர்தான் கரை காசா பகுதியை ஆக்கிரமித்த நாளிலிருந்து இவர்கள் துயரக் கதை தொடர்கின்றது; பாலத்தீனிய மக்களை முற்றுகைக்குள் தனிமைப் படுத்தினர்; வெளி உலகத் தொடர்புகளை துண்டித்தனர்; திட்டமிட்ட இராணுவ மயப்படுத்தப்பட்ட யூதக்குடியேற்றங்களை இப்பகுதிக்கிடையில் உருவாக்கினர்; போராட்டத் தலைமையாக இம் மக்கள் கருதிய பாலத்தீனிய விடுதலை இயக்கத் தொடர்பை முற்றாக இல்லாமல் செய்தனர்; இவ்வாறாக இம் மக்களை அடிமைப் படுத்த இசுரேல் இதுவரை முயன்று வந்துள்ளது ஆனால் எதிர்பார்த்தது நடக்கவில்லை 1987ம் ஆண்டிலிருந்து அடக்குமுறை தாளாமல் இப் பாலத்தீனயர் இயல்பாக கிளர்ந்தெழுந்து தாமாக போராடலாயினர் கையிலகப்படும் கற்கள், இரும்புத் துண்டங்களிலிருந்து நாட்டுப்புற கைக்குண்டுகளே இவர்கள் ஆயுதங்கள். மக்கள் முழுமையாக நின்று பல இசுரேலிய இராணுவத்தை கல்லால் அடித்தே கொன்றனர் உளவாளிகட்கு பகிரங்க மரண தண்டனை வழங்கினர் முழுமையான ஒத்துழையாமை இயக்கத்தை நடாத்தினர் இவர்கள் எழுச்சிக்கு ''இன்ரிபாதா'' 'INTIFADA' எனப் பெயரிடப்பட்டு இன்று 5 ஆண்டுகட்கு மேலாக உலகம் வியப்புறும் வண்ணம் பெரும் மக்கள் போராட்ட வடிவமாக மாறியுள்ளது அதுமட்டுமன்றி பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் மிதவாதப் போக்கிற்கு மாறான தீவிரத்தன்மையுள்ள இயக்கங்கள் தோன்றின இசுரேல் ஆக்கிரமித்த பாலத்தீனிய மக்களின் எழுச்சியை வெளிக்காட்டுக் குறியீடாகத் தான் கமாஸ் HAMAS) எனப்படும் எதிர்ப்பியக்கம் வளர்ந்து விட்டது மதஅடிப்படையிலான இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் இன்று எல்லாத்தரப் பையுமே மிகப் பாரிய நெருக்கடியொன்றுக்குள் தள்ளிவிட்டுள்ளன. தொடக்கத்தில் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தை முழுமையான பயங்கரவாத இயக்கம் எனக்கூறி அதனோடு எத்தொடர்பும் வைக்க முடியாது என்ற இசுரேலிய அரசு கமாஸ் இயக்கத்தினர் தொடக்க கால வளர்ச்சியை கண்டும் காணாதது போல் இருந்தது காரணம் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கு அதன் தலைமைக்கு சவாலாக இது உருவாகுவது அவர்கட்கு உவப்பாக இருந்தது பாலத்தீனிய விடுதலை இயக்கத்திடமோ கமாஸ் இயக்கத்தால் தமது தலைமைப்பதவி கண்டனத்திற்குள்ளாவதும் இன்ரிபாதா போராட்டம் தமது கை நழுவிப் போவதும் சிறிதேனும் விருப்பமில்லாத விடயமாக இருந்தது ஆனால் கமாஸின் வளர்ச்சி மக்களின் எழுச்சி இவர்களை மிக இக்கட்டான நிலைக்கு தள்ளிவிட்டது முனைப்பாக போராடி எதிரியை பலவீனப்படுத்தியதன் விளைவாக நடக்க வேண்டிய பேச்சுவார்த்தையை பாலத்தீனிய விடுதலை இயக்கம் பலவீனமான நிலையிலொரு பகைச் சதகமாக வைத்து அதுவும் வளைகுடாப் போரின் பக்க விளைவாக நடப்பது பெரும் தோல்வி நிலை என கமாஸ் கருதுமளவு முற்றாக மறுக்க முடியாத நிலை பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ளது அதேசமயம் கமாஸின் வளர்ச்சியை தடுப்பதற்காக பாலத்தீனிய விடுதலை இயக்கத்தை அங்கீகரித்து அதனோடு பேச வேண்டிய சூழ்நிலை இசுரவேலுக்கு இன்று ஏற்பட்டுள்ளது இன்று யசிர் அரபாத் இசுரவேல் தொலைக்காட்சியில் தோன்றி சிரிக்கிறார். ஒற்றைக்கண் புகழ் இசுரேலிய முன்னாள் ராணுவத் தளபதி மோசே தயானின் புதல்வி ரியூனிஸ் சென்று அரபாத்தை பேட்டி காண்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக இசுரேலிய நாடாளுமன்றமோ பாலத்தீனிய விடுதலை இயக்கத்தோடு தொடர்புகளை வைத்திருக்க அனுமதிக்கும் சட்டத்தை நிறைவேற்றி விட்டது பாலத்தீனிய விடுதலை இயக்கத்தை பெரும் பூதமாக சித்தரித்த இசுரேலியர் இப்போது கமாஸ் இயக்கத்தைப் பெரும் பூதமாகவும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தை நண்பனாகவும் சித்தரிக்கத் தொடங்கி விட்டதாக செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். ''நாடுகடத்தும் நிகழ்ச்சிகளை திரும்ப ஏற்கமாட்டேன்'' என முதலில் சூளுரைத்தார் யிட்சாக் றபின் பின்னர் பல்வேறு அழுத்தங்கட்குப் பணிந்து 10 பேரை தவறுதலாக நாடுகடத்தினர் என அவர்களைத் திருப்பியழைத்தார் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைத் தலையிட அனுமதித்தார்; இப்போது 100 பேரை திருப்ப ஏற்கத் தயார் என பெயர்ப்பட்டியல் தயாரிக்கிறார் பாலத்தீனிய விடுதலை இயக்கமோ மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையிலிருக்கின்றது நாடுகடத்தப்பட்டோர் கமாஸ் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் தமது தலைமைக்கு கடும் எதிர்ப்பைக் காட்டுபவர்; பேச்சுவார்த்தைக்கு எதிரானவர் என்று அறிந்திருந்தும் வேறு வழியின்றி முழுமையான தமது ஆதரவு இம்மக்கள் பக்கமே என அறிவிக்க வேண்டியதாயிற்று. மத்திய கிழக்கு பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றும் தமக்காதரவான தரப்பினரை தடுத்து நிறுத்தவும் வேண்டியதாயிற்று.

எது எப்படியிருப்பினும் இசுரவேல் மிகவும் கொடுமையான தனது அடக்குமுறைகளை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்கின்றது இதுவரை 1200 பாலத்தீனியரைக் கொன்று குவித்துள்ளது பாலத்தீனியரோ 110க்கு மேற்பட்ட இசுரேலிய இராணுவத்தினரை கொன்றுள்ளனர் படிப்படியாக பாலத்தீனியரின் எதிர்ப்பு வடிவம் மீண்டும் ஆயுத வடிவத்தைப் பெறத் தொடங்குகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் இசுரேலிய இராணுவத்தின் மீது மறைந்திருந்து தாக்கி ஐவரைக் கொலை செய்த கமாஸ் இயக்கப் போராளிகள் பின்னர் எல்லைப்புற காவல் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் மேஜர் ஒருவரைக் கொன்றனர். இக் கொலைகள் ஏற்படுத்திய தாக்கம் காரணமாக சினம் கொண்ட இசுரேலிய அரசு பாலத்தீனிய மக்கள் மேல் பழிவாங்கியது. தனது வழமையான கூட்டுத்தண்டனை முறையால் 417 பாலத்தீனியரை கமாஸ் இயக்கத்தோடு தொடர்புள்ளவர் எனக் காரணம் காட்டி நாடு கடத்தியது. ஆனால் இம்முறை இசுரவேல் எதிர்பாராத நிகழ்வுகள் அங்கேறத்தொடங்கின. ஏனெனில் இம்முறை லெபனான் பிரதம மந்திரி சிரியாவின் ஆதரவு காரணமாக இசுரவேலின் பிடிவாதத்திற்கு மேலான பிடிவாதத்தை காட்டுகிறார். அதுமட்டுமன்றி உலக அபிப்பிராயமும் முற்றாக எதிராகத் திரும்பவே அமெரிக்காவிடம் தயவை வழமை போல இசுரவேல் நாட வேண்டியதாயிற்று. பில்கிளின்டனோ இசுரவேலைப் பொறுத்தவரை பழைய நண்பன்தான். இசுரவேலுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபை விதிக்கப்போகும் தடைகளை தடுக்க கிளின்டன் தயாராகி வருகிறார். அதுமட்டுமன்றி ஒருசமரச திட்டத்தின்படி நாடுகடத்தப்பட்டோரில் 100 பேரை இசுரவேலும் மிகுதிப் பேர்களை லெபனானியோர் தான் ஏற்க வேண்டுமெனவும் கேட்கப்படுவார்கள் எனத் தெரிகின்றது இது இசுரவேலை காப்பாற்றும் முயற்சி என்பது அப்பட்டமாக தெரிகின்றது ஆனால் போராடும் பாலத்தீனயரோ இதனை ஏற்கத் தயாரில்லை இதனால் திட்டமிட்டபடி நடக்கும் என அமெரிக்க நிருவாகம் கூறிய மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தையை வேறு வழியின்றி அமெரிக்கா தள்ளிப் போட வேண்டியதாயிற்று. இவ்வாறாக தென் லெபனானின் மூலையொன்றிலிருந்து இச் சிறு தொகை பாலத்தீனியரின் போராட்டத் தாக்கம் உலகெங்கும் இன்று எதிரொலிக்கின்றது.

இம் மக்களின் மனவுறுதி மிக அற்புதமானது ஏனென்றால் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு தாயகத்திலிருந்து தூர இருக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கமோ நியுயோர்க் பேச்சுவார்த்தைகளில் தாங்கள் நேரடியாக கலந்து கொள்ளும் காலம் வராதா என கனவு காண்கின்றனர் விமானக் கடத்தல் பணயக் கைதிகள் என தீவிரப்போக்கினை பின்பற்றி மேற்குலகை நடுநடுங்க வைத்த இடதுசாரி தீவிர இயக்கங்களான PFLP, DPLF போன்றவை இருக்குமிடமே தெரியவில்லை. போதாக்குறைக்கு பாலத்தீனியரின் தளமாக விளங்கும் லெபனானிலோ பாலத்தீனிய போட்டிக் குழுக்கள் தமக்குள் சண்டையிட்டு மாய்கின்றனர். இவை எல்லாவற்றையும் விட 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட போராட்ட வரலாற்றில் இன்னும் 1 அங்குல பாலத்தீனிய மண்ணாவது மீட்கப்படவில்லை இத்தகைய பாரிய பின்னடைவுகள் மத்தியிலும் அவைபற்றி எண்ணி சோர்வடையாமல் சுய எழுச்சி கொண்டுபோராடும் மக்களின் மனவுறுதி இவ்வுலகை இன்று பெரிதும் உலுக்கிக்கொண்டே இருக்கிறது. இத்தகைய மக்களின் போராட்ட வடிவத்தின் ஒரு புதிய பரிமாணம்தான் இன்று வெட்ட வெளியில் கொட்டும் பனியில் தொடரும் இம் மக்களின் புதுமைப் போராட்டம்.

- பாலகுமாரன் -

## குரல் கேட்டுத் திறக்கும் கதவுகள்

இன்றைய உலகில் தொழில் நுட்ப திறனால் ஒருவரின் குரலைக் கேட்டு அல்லது கைரேகை அடையாளம் கண்டு கதவு திறக்கிறது என்றால் நீங்கள் நம்புவீர்களா?

பயோமெட்ரிக்ஸ் என்னும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவில் பாதுகாப்பாக கதவு திறக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது வீட்டுச் சொந்தக்காரர் கதவில் கைவைத்தாலோ குரல் கொடுத்தாலோ கதவு திறக்கும்.

வீட்டுச் சொந்தக்காரரின் கைரேகைகள், குரல் என்பன ஏற்கனவே எலெக்ட்ரோனிக் தளத்தில் பதிவுசெய்யப்பட்டு இருக்கும் கதவில் இச்சாதனம் பொருத்தப்படும் கதவுக்குப் பின்பக்கமாக நிற்கும்போதும் குரல் கொடுக்கும் போதும் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட குரலொலியுடன் ஒப்பிட்டுப்பார்த்ததும் கதவு திறக்கும்.

கதவுகள் மட்டுமல்ல பணப்பெட்டிகள், பாதுகாப்புப் பெட்டிகளிலும் இச்சாதனம் பொருத்தப்படுகின்றது.

குரலை மாற்றிக் கதைத்தாலும்கூட இச்சாதனம் கண்டுபிடித்துவிடுகிறது. இக்குரல் அடையாள 'பயோமெட்ரிக்ஸ்' சாதனத்தின் விலை 1200 டொலர் மட்டுமே.

## யாழ்நகரில்

உறிஞ்சும் இந்தத் 'தன் ஓட்டுண்ணிகளை' எந்த அளவு கோலை வைத்து அளப்பது? எல்லாம் இலாப நோக்குத்தான். இவர்களின் நடவடிக்கை கறுப்புப் பணத்தில் போய் முடிகிறது.

கொழும்பு செட்டியார் தெரு நகைக்கடைகள் போல் ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள் எனறு பெரிய எழுத்தில் பெயர்ப் பலகைகளைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் பார்மஸிகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சுமார் பதினேழு உள்ளன. சில மருந்துக்கடைகளைத் தவிர மற்றவை எல்லாமே ஒரே கூடை செங்கற்கள்தான். யாழ்ப்பாணம் நகரில் இப்படியென்றால் புறநகர்ப் பகுதிகளிலும் கடந்த சில ஆண்டுகளுக்குள் மூலைக்கு மூலை மருந்துக் கடைகள் முளைதது விட்டன. மருந்துக் கடைகள் இந்த அளவிற்கு வளர்ந்து பெருகிவருவதற்கு இந்த மருந்துக் கடைகளில் கிடைக்கும் பாரிய இலாபமும் ஒரு காரணமாயிருக்கிறது.

### அபாயகரமான மருந்துகள்

மருந்துகள் மற்றும் நோய்கள் குறித்துச் சாதாரண மக்களிடம் காணப்படும் அறியாமையைப் பயன்படுத்திப் பல அபாயகரமான மருந்துகளை மருந்து வியாபாரிகள் மக்களுக்கு விற்பது அன்றாட வழக்கமாகிவிட்டது. உலகில் தடை செய்யப்பட்ட ஆபத்தான விஷ மருந்துகளை, மக்களின் பாவனைக்கு ஏற்றதல்ல என்று தெரிந்தும், இந்த மருந்துகள் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகின்றன.

உதாரணமாக, ஆபத்தானது என்பது தெரிந்திருந்தும் கர்ப்பத்திலிருக்கும்சிசுவைஅழிக்கும் மருந்து ஒன்று எமக்குத் தெரிந்தளவில் யாழ் நகரில் இரு பார்மஸிகளில் விற்பனையாகின்றன. இது இலங்கையில் விற்பனைக்குத் தடை செய்யப்பட்ட மருந்தாகும். முன்பு ஜேர்மன் நிறுவனம் தயாரித்த இந்த மருந்தை இப்போது ஊர் பெயர் தெரியாத நிறுவனம் ஒன்று தயாரித்து விநியோகிக்கிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இந்தக் கர்ப்பச் சிதைவு மருந்து வட பிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கும் ஒருவரின் பார்மஸியில் இன்றும இரகசியமாக விற்பனையாகின்றது. மற்றக் கடையை விட இந்த மருநதுக்கு இங்கு உச்ச விலை. (முன்பு சதாரணமாக இருந்த மருந்தின் விலை ரூபா 30) இரண்டு மாத்திரைகள் 140 ரூபா. அவ்வளவுதான். டாக்டரின் துண்டு இல்லாமலேயே இந்த மருந்து விற்கப்படுவது இநத வியாபாரத்தின் மற்றொரு பரிமாணம் எது எப்படியிருந்தாலும் இது வேலியே பயிரை மேயும் கதை. எல்லாப் பூனையுமேபால் பானையில் வாய் வைக்கும் என்பதை அவர் நிரூபித்து விட்டார். அநியாயமாக ஓர் உயிர் பிரிந்து விடக் கூடாது என்று நாம் அங்கலாய்க்கிறோம். ஆனால் எம் கண் முன்னே ஒரு உயிரைக் கொல்ல நாம் மருந்து விநகிறோம். அதே நேரததில் கேள்விக்கிடமின்றி இவர்கள் தொழில் தொடர்ந்து நடைபெறுகின்றது.

### விலை அதிகரிப்புக்குக் காரணம் என்ன?

O அரசு விதித்திருக்கும் அத்தியாவசிய மருந்துகள் மீதான தடையினால் எமது தேவைக்கேற்ற மருந்து எமக்கு வநது சேர்வதில்லை. இதனால் மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு யாழ் குடாநாட்டில் நிலவுகிறது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திஇலாபநோக்கில் இயங்கும் பல மருந்து வர்த்தகர்கள் பதுக்கலில் இறங்கிக் கறுப்புச் சந்தை நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். தமது கடைகள் தவிர்ந்தஏனைய இடங்களிலும் மருந்துகள் களஞ்சியப்படுத்தப் படுவதை அவதானிக்க முடிகிறது.

O யாழ்.போதனா வைத்திய சாலையில் கப்பல் வந்தால்தான் மருந்து என்ற நிலை. இதன் விளைவு போதனா வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களுக்கும் வெளி நோயாளர்களுக்கும் டாக்டர்கள் மருந்துகளை எழுதித் தள்ளுகிறார்கள் குறிப்பிட்ட மருந்துக்குப் போதனா வைத்திய சாலையில் தட்டுப்பாடு ஏற்பட்டதும் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மருந்துக் கடைகளில் அந்த மருந்து ஏகப்பட்ட விலைக்குவிற்பனையாகின்றது. ஆஸ்பத்திரிக்கு மருந்து வந்ததும் அந்த மருந்தின் விலை இறங்குவது சர்வ சகஜம்.

O மருததுவர்பற்றாக்குறை, மருந்துத் தட்டுப்பாடு ஆகியவற்றால் அரச மருத்துவ மனைகளை நடுத்தர வர்க்கத்தினர் நாடாமல் தனியார் மருத்துவ மனைகளையே பெரும்பாலும் நாடுகின்றனர். இதனால் டாக்டர்கள் எழுதிக் கொடுக்கும் துண்டுகளைக் கொண்டுநோயாளிகள் பார்மஸிகள் மீது படை எடுக்கும் போது மருந்துப் பொருள்களின் விலையை ஏற்றுகின்றனர். தவிர்க்க முடியாத நிலையில் பணம் படைத்தவர்கள் கூடிய விலையில் மருந்துகளைவாங்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

O பெரும்பாலான தனியார் மருந்துக் கடைகளைத் தொடங்குபவர்கள் யார்? பெரும்பாலும்வசதியான பொருளாதார பின்னணி கொண்டவர்களே ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்களை ஆரம்பித்து நிர்வகிக்கிறார்கள். பயிற்றப்பட்ட மருந்தாளர்கள் பணிக்கு அமர்த்தப் படுவதில்லை. முற்றிலும் வியாபார நோக்கில் செயற்படும் இந்த மருந்துக் கடைகளில் நியாயமான விலையை எதிர்பார்ப்பது குதிரைக் கொம்புதான, நோயாளர்களுக்குச் சேவையாற்றும் நோக்குடன் ஒருசில ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்கள் மாத்திரமே செயற்படுகின்றன.

O மருந்துக் கம்பனிகளின் விற்பனைப் பிரதிநிதிகள் முற்றாக யாழ்ப்பாணத்தில் இப்போது இல்லை. விற்பனைப் பிரதிநிதிகளுக்குப் (Sales Representatives) பதில் 'வழி வியாபாரி' முறை யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது. இந்த 'வழி வியாபாரிகள்' வவுனியா அல்லது கொழும்பு மட்டும் போய் மருந்து கொண்டுவருவதில்லை' மொத்த வியாபாரிகளிடமிருந்து கூடுதலாகப் பெற்ற வைத்தியர்கள் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள மொத்த விற்பனை நிலையங்களிலிருந்தும் மருந்துகளைப் பெற்று பார்மஸிகளுக்கு விற்பது இவர்கள் தொழில் இப்படியாக மருந்து கைமாறும் நிலையிலும் லாபம கருதிமருந்துகளின் விலையில் மாற்றம் செய்யப்படுகின்றது.

O ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள மருந்தாளர்களுக்கு அதற்குரிய முறையான பயிற்சி எதுவும் இல்லை. இதனால் மருந்துவகைகளை நோயாளிகளுக்கு மாறிக் கொடுக்கும் அபாயம் ஒருபுறமிருக்க இன்னொரு பக்கத்தில் பார்த்தால், மருந்துக் கடையில் தொழில் பார்ப்பவர்களும் சுரண்டப் படுகிறார்கள்.

அரசு வடகிழக்கு மககளுக்கான மருந்துத்தேவைகளை நேரடியாகப் புறக்கணிக்கிறது உணவு, உடை, வீடு போல மருந்தும் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. இதற்கான மக்களின் போராட்டம் தான் ஆங்கில மருந்து விற்பனைச்சீர்கேடுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றும். நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி மருந்து வர்த்தகர் தமது மனித நேயமற்ற விற்பனைக் கொள்கையை நியாயப்படுத்த முடியாது.


## அறிவித்தல்

## சர்வதேச மகளிர் தின விழா 1993 பங்குனி 8

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு 1993ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி பின்வரும் போட்டிகளை நடாத்த உள்ளது:

### மாணவர்களுக்கான போட்டிகள்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
போட்டி முடிவு திகதி : 1993-02-20
போட்டி நடைபெறும் திகதி: 1993-02-21
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி. போட்டியாளர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படமாட்டாது

1. மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி:

கீழ்ப்பிரிவு (6. 7, 8ஆம் ஆண்டு மாணவர்கள்)
நேரம்: 04-05 நிமிடங்கள்.
விடயம்:- ''கூட்டுறவு'', ''சர்வதேச மகளிர் தினம்''

மத்திய பிரிவு 9, 10, 11-ம் ஆண்டு மாணவர்கள்
நேரம்: 05 - 07 நிமிடங்கள்
விடயம்:- ''கூட்டுறவின்மூலம் தமிழீழ பொருளாதார அபிவிருத்தி'', 'மகளிர் தலைமைத்துவம்''

மேற்பிரிவு: (12, 13-ம் ஆண்டு மாணவர்கள்)
நேரம்: 06-08 நிமிடங்கள்
விடயம்:- போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்படும்.

2. மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி:

போட்டிகள் கீழ், மத்திய, மேல் என மூன்று பிரிவாக நடத்தப்படும். ''மகளிர் அபிவிருத்தி'', ''கூட்டுறவு தொடர்பான விடயம்'' போட்டி நடைபெறும் நாளன்று கட்டுரை லைப்பாக வழங்கப்படும். பங்குபற்றுவோரால் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பாடசாலை அதிபர் ஊடாக படிக்கும் ஆண்டை உறுதிப்படுத்தி 1993-02-20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அங்கத்துவச் சங்கங்களின் மகளிர் அங்கத்தவர்களிடையே கோலம். பேச்சு, கட்டுரை, உணவு தயாரித்தல் போட்டிகள் நடைபெறவுள்ளன

போட்டி முடிவு திகதி: 1993 02-20

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இலக்கம் 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5983)



## இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

### நான்காம் நாள் நிகழ்ச்சிகள் 12 - 2 - 93 இன்று

மாலை 4.00 — 5.00 மங்கள இசை
நாதஸ்வரம்: பி. சுதந்திரன், எ பாலகிருஷ்ணன்
தவில்: எ சின்னக்கணேசு, கே. விக்னேஸ்வரன்

5 00 — 5 10 மிருதங்க இசை
சரஸ்வதி இசை மன்ற மாணவர்கள்

5 10 — 5.30 பாட்டு-பாரதி கானசபா மாணவிகள்
பாட்டு: பொ. சயந்தினி - செ. காஞ்சனா
க. கீர்வாணி - செ. கௌரீஸ்வரி
தெ. அகிலா - செ. கவிதா
வயலின்: வி. கௌரி
மிருதங்கம்: சதாவேல்மாறன்

53.0 — 6.00 வீணை - உதயந்தி வாமதேவன்
மிருதங்கம்: பி. ரதிருபன்

6.00 — 6.45 வயலினிசை-எ. ஜெயராமன்
மிருதங்கம்: எஸ் நாகராஜன்
கடம்: சதாவேல்மாறன்

6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்
திரு. கு. ராமச்சந்திரன் (வர்த்தகர்)
திரு. தி சுந்தரலிங்கம் (தலைவர், ஊர்காவற்றுறை எம். பி. சி. எஸ் )
திரு .ம. யோகலிங்கம் (வர்த்தகர்)
தலைவர்: திருமதி கார்த்திகேயன் (அதிபர் மங்கையற்கரசி வித்தியாசாலை)
சிறப்பு விருந்தினர்: திருமதி தி. நாகராஜா (அதிபர் இந்து மகளிர் கல்லூரி)

7.00 — 8.00 இசைக்கச்சேரி
பாட்டு: எம். வர்ணகுலசிங்கம்
வயலின்: எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்; வர்ணராமேஸ்வரன்

8.00 — 8.45 நாடகம்
நீராவியடி கலைக் கல்லூரி வழங்கும்
புலவர் முத்துராசரெத்தினத்தின் நெறியாள்கையில்
இலங்கைவேந்தன் பங்குபற்றும்
''பண்டாரவன்னியன்''

8.45 — 9.45 காளிகோயில் இந்து இளைஞர் மன்றம் வழங்கும்
''காத்தவராயன்'' சிந்து நடைக் கூத்து

வாழ்த்துவோர் :

### ரூபன் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி

(சி-5965)


# அகதி அந்தஸ்து கோருவோரை திருப்பி அனுப்ப வேண்டாம்

## – ஜேர்மனியிடம் ஐ. நா. கோரிக்கை

ஜேர்மனியில் அகதிகள் அந்தஸ்துக் கோருவோரைத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று பொன் அரசை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நேற்றுக் கேட்டுள்ளது.

அரசியல் தஞ்சம்கோருவோரைத் திருப்பி அனுப்புவது சர்வதேசச் சட்டத்தை மீறும் செயலாகும் என்று அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது. மேலும் எந்த நாட்டின் வழியாக அகதிகள் ஜேர்மன் நாட்டிற்குள் நுழைந்தார்களோ அந்த அயல் நாட்டிற்கு அகதிகளைத் திருப்பி அனுப்புவது குடியகல்வுச் சட்டங்களுக்கு முரணானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஜேர்மன் அரசு அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்டங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற ஆலோசித்து வருகிறது. இச்சட்டம் ஜேர்மன் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால், அரசியல் தஞ்சம் கோருவோரைத் நிராகரிக்கும் உரிமை ஜேர்மன் அரசு பெறும்.




# ஒருங்கிணைந்து செயற்பட தமிழக காங்கிரஸ் தீர்மானம்

(சென்னை)

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின், இரண்டு அணியினரும், ஒருங்கிணைந்து செயலாற்றுவது என்று காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள்ளது.

சட்டமன்ற காங்கிரஸ்கட்சி உறுப்பினர்கள் அனைவரும், காங்கிரஸ் அலுவலகத்தில் நேற்று முன்தினம் கூடியபோது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் இரண்டு மணிநேரத்திற்கும் அதிகமாக நீடித்த இக்கூட்டத்தில் தமிழகத்தில் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக செயற்படுவதெனவும், கட்சியின் வெவ்வேறு கோஷ்டியினருக்கிடையே இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒரேயணியாக செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என இக்கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் கூட்டாகப் பேசிய கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியமும் தெரிவித்தனர்.

# உதவிப் பண கொடுப்பனவு

மாதாந்த பொதுசன உதவிப் பணக் கொடுப்பனவுகள் எதிர்வரும் பங்குனி மாதத்தில் இருந்து சாவகச்சேரி கொடிகாமம் அஞ்சல் அலுவலகங்களிலும், அவற்றின் கீழ் உள்ள உப அஞ்சல் அலுவலகங்களிலும் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாவகச்சேரி அஞ்சல் அதிபர் தெரிவிக்கின்றார்.

# தமிழீழ பொதுக்கல்வி தேர்வு பரிசு பெறுவோர் விபரம்

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினரால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில், தேசிய மட்டம், கோட்டமட்டங்களில் சிறப்புத்தகைமைகளைப் பெற்று பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:-

### தேசியப் பரிசுகள்

- குணசேகரம் யூட்ரைறோன், யா. சென்பற்றிக்ஸ் கல்லூரி
- ரஜனி மகேந்திரன், யா. யாழ்ப்பாணக் கல்லூரி
- சர்மிலா கதிர்காமசேகரர், யா. வேம்படி மகளிர் கல்லூரி
- ஞானப்பிரகாசம் வசந்தகுமார், யா. பரியோவான் கல்லூரி
- ஆனந்தசெல்வம் ஜெயானந்தி, யா. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
- சிவாஜினி சிவசுப்பிரமணியம், யா. வேம்படி மகளிர் கல்லூரி
- சிவபிரகாசம் விஜயபாலன், யா. ஹாட்லிக் கல்லூரி
- விவேகானந்தன் சஞ்சீபன், யா. யாழ். இந்துக் கல்லூரி
- சந்திரசேகரம் சுரேஸ்குமார், யா. கொக்குவில் இந்துக் கல்லூரி
- றஞ்சித்தா சிவபாதம், யா. உடுவில் மகளிர் கல்லூரி

### யாழ் கல்விக் கோட்டம்

- அலோசியஸ் அமிர்தநாதன் டொமினிக் அரவிந்தன் யா. யாழ் இந்துக்கல்லூரி
- தர்மராஜன் வினோதன், யா. யாழ் இந்துக்கல்லூரி
- ஜெயராசா ஜெயகாந்தன், யா. யாழ். இந்துக்கல்லூரி
- ஜெயராசசிங்கம் மருதா, யா. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
- சதாசிவம் ரஜீவ், யா. இந்துக்கல்லூரி

### வடமராட்சிக் கல்விக்கோட்டம்

- கந்தசாமி பிறிந்திகா, யா. வடமராட்சி ம. மகளிர் கல்லூரி
- இராஜரட்ணம் ரமேஸ்சங்கர், யா. ஹாட்லிக்கல்லூரி
- செல்வராஜா ரமேஸ், யா. ஹாட்லிக் கல்லூரி
- ஜெகன்மதனாசினி பூரணம்பிள்ளை, யா. மெதடிஸ் பெண்கள் பாடசாலை
- சாந்தினி சிவராஜசிங்கம், யா. வட. இந்து மகளிர் கல்லூரி
- சிற்றம்பலம் சதீஸ், யா. ஹாட்லிக் கல்லூரி

### தென்மராட்சிக் கல்விக்கோட்டம்

- நல்லையா வானதி, யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- விஜயரட்ணம் சுலா, யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- கிருஷ்ணசாமி திவ்வியன், யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- குமாரசாமி திருச்செல்வி, யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- கந்தையா ரேணுகாபதி, யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம்

- திருநாவுக்கரசு ஜெகதீஸ்வரி, யா. வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி
- சூசைராஜா யூலியனா மரிய கௌசலியா, யா. இளவாலை கன்னியர் மடம்
- தங்கராஜா பகீரதன், யா. மகாஜனாக் கல்லூரி
- குருசாமி சுபாஜினி யா. யாழ்ப்பாணக் கல்லூரி
- சேனாபதி தயாழினி, யா. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

### மருதனாமடக் கல்விக் கோட்டம்

- லோகப்பிரகாசம் மதனி, யா. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
- அம்பலவாணர் கோபிகா, யா. உடுவில் மகளிர் கல்லூரி
- பவசிங்கம் கோஷலி, யா. உடுவில் மகளிர் கல்லூரி
- சற்குணசிங்கம் சற்குணானந்தன் மானிப்பாய் இந்துக் கல்லூரி
- ஜெகநாதன் சஸ்மிதா, யா. மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி

### வேலணைக் கல்விக் கோட்டம்

- வல்லிபுரம் சுகந்தன், யா ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
- திருஞானம் றஜேந்தன், யா. சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகா வித்தியாலயம்
- சுந்தரம்பிள்ளை அருள்சோதி யா சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம்
- இந்திரநாதன் சுஜாதா, யா. கரம்பன் சண்முகநாத வித்தியாலயம் ஊர்காவற்றுறை
- செல்வகுமார் சுகுணகுமார், யா. மண்டைதீவு மகா வித்தியாலயம்

### கிளிநொச்சி மாவட்டம்

- கனேந்திரம் பிரசாந்தி, கிளி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
- மாலிங்கம் சாந்தீபன், கிளி. பளை மகாவித்தியாலயம்
- இராஜா துஷாயினி கிளி. இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலை
- சண்முகலிங்கம் குறிஞ்சிதரன், கிளி. இராமநாதபுரம் மேற்கு மகாவித்தியாலயம்
- குணரத்தினம் குணதர்சனா, கிளி. பளை மகாவித்தியாலயம்

### வவுனியா மாவட்டம்

- தனபாலசிங்கம் தர்சினி, வ. கனகராஜன் குளம் மகாவித்தியாலயம்
- தர்மநாயகம் பசில்தர்ஷிதன், வ. ஓமந்தை மகாவித்தியாலயம்
- சங்கரப்பிள்ளை சத்தியநாதன், வ. ஓமந்தை மகா வித்தியாலயம்
- வீரேஸ்வரன் மதனிகா, வ. பூவரசங்குளம் மகாவித்தியாலயம்
- சந்திரலிங்கம் ரஞ்சித்குமார், வ. பூவரசங்குளம் மகாவித்தியாலயம்

### மன்னார் மாவட்டம்

- முருகையா அன்ரனற் ஜீவராணி, ம. அரிப்பு றோ.க.த. பாடசாலை
- லூர்த்துநாயகம் கிளறின், ம. நானாட்டான் மகா வித்தியாலயம்
- யோசேப்மேரி அன்ரனிற்றா ஜெயானந்தி, ம. அரிப்பு றோ. க. த. பாடசாலை
- அமிர்தநாயகம் அகிறின் சசிகரன், ம. நானாட்டான் மகாவித்தியாலயம்
- பாலசேகரம் டொறின் காமலிற்றா, ம. நானாட்டன் மகாவித்தியாலயம்

### முல்லை மாவட்டம்

- மகாதேவன் பத்மன், மு. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்
- விஜிதா ராஜேந்திரம், மு. மல்லாவி மகா வித்தியாலயம்
- சரவணபவானந்தசிவம் பிரதீபன், மு. வித்தியானந்தாக் கல்லூரி
- சின்னத்துரை சுகந்தினி, மு. வற்றாப்பளை க. உ.
- மரியநாயகம் ஒஸ்மென்சாவ்ஸ், மு. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்
- சின்னத்தம்பி நிரஞ்சலா, மு. புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்

### தமிழ்மொழி பாடத்திற்கான சிறப்புப் பரிசு பெறுவோர்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தமிழ்மொழி பாடத்திற்கு ஏழுபேர் சிறப்புப் பரிசுகளைப் பெற்றுள்ளனர். இவர்களின் விபரம் வருமாறு:

- ★ கதிர்காமநாதன் பிரதாபன். சென்பற்றிக்ஸ் கல்லூரி.
- ★ சிவாஜினி சிவசுப்பிரமணியம், வேம்படி மகளிர் கல்லூரி.
- ★ கிருஷ்ணசாமி திவ்வியன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
- ★ சிரோணி ஆறுமுகம், வேம்படி மகளிர் கல்லூரி.
- ★ இராஜலிங்கம் நிர்மலா, யூனியன் கல்லூரி.
- ★ செல்வத்துரை சுகந்தினி, அச்செழு சைவப்பிரகாசா
- ★ ஆனந்தசெல்வம் ஜெயானந்தி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

### விஞ்ஞான பாடத்தில் சிறப்புப் பரிசினைப் பெறுபவர்

இத்தேர்வில் தேசிய மட்டத்தில் விஞ்ஞான பாடத்தில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று சிறப்பும் பரிசினைப் பெறுபவர் விபரம்:

- ★ கயிலாயநாதன் சுதர்சன் மு/யோகபுரம் மகா வித்தியாலயம்.

# அகதி முகாமில் தீ விபத்து

(வடமராட்சி கிழக்கு)

மாமுனையில் அமைந்துள்ள அகதிமுகாம் தீப்பிடித்தது. மக்களின் முயற்சியினால் பல குடிசைகளுக்கு ஏற்படவிருந்த சேதம் தவிர்க்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, மாமுனையில் அமைந்துள்ள ஆழியவளை மக்கள் தங்கியுள்ள அகதி முகாமில் உள்ள வயிரவப்பிள்ளை வாரித்தம்பி என்பவரின் குடிசை மீது திடீரென தீப்பிடித்து முற்றாக எரிந்து சாம்பரானது.

அங்குள்ள மக்களின் முயற்சியினால், ஏனைய குடிசைகள் தீப்பிடித்து எரிவது தவிர்க்கப்பட்டது.

குடிசையினுள்ள குசினியிலிருந்தே தீப்பிடித்ததாக தெரியவருகின்றது. (36)

# பாரதீய ஜனதாவின் பேரணிக்குத் தடை

இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் அரசு பதவி விலகி உடனடியாக நாடாளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இம்மாதம் 25 ஆம் திகதி புதுடில்லியில் மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி நடைபெறவுள்ளது.

சுமார் 15 லட்சம் மக்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியை பாரதீய ஜனதாக் கட்சி ஏற்பாடுசெய்துள்ளது.

அதேவேளை இப்பேரணியைத் தடைசெய்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இவ்வாறான பேரணி மீண்டும் மதக்கலவரத்தைத் தூண்டும் என்று உள் துறை அமைச்சர் கூறினார்.

இந்த நிலையில் தாம் இப்பேரணியை நடாத்துவதா இல்லையா என்பது குறித்து தமது அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்று பாரதீய ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

கிளாலிக

வும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இருந்த கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து நேற்று நள்ளிரவு வரை அறிந்துகொள்ள முடியவில்லை

கிளாலி கடற்கரையில் இருந்து பயணத்தை ஆரம்பித்த படகுகள் ஆலங்கேணியைச் சென்றடைந்ததாகவும், எனினும் ஆலங்கேணியிலிருந்து பயணத்தை ஆரம்பித்தவர்கள் நள்ளிரவு வரை கிளாலிக் கரையை வந்தடையவில்லை என்றும் கூறப்படுகிறது.

# சில அவசரகால விதிகளை அரசாங்கம் தளர்த்த முடிவு

## மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் தப்பித்துக் கொள்ளத் தந்திரம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் அவசரகாலச் சட்டத்திலுள்ள சில விதிகளைத் தளர்த்தவுள்ளதாக அறிவித்துள்ளது. ஐ. நா. சபையின் மனித உரிமைகள் கழகத்தின் கூட்டம் ஒன்று அடுத்தவாரம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளதால் சிறிலங்கா அரசு தன்னை நாணயம் மிக்கதாகக் காட்டிக்கொள்ள இவ்விதிகளைத் தளர்த்த முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தளர்வின் விளைவாக இராணுவத்தினரால் கைது செய்யப்படுபவர்கள் இரண்டு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

சிறிலங்கா இராணுவம் மனித உரிமைகளை மதிப்பதில்லை என்றும் வடகிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் கொலை செய்யப்படுகின்றனர் என்றும் ஐ நா. சபை அதிகாரிகளிடம் தமிழர்கள் பலர் முறையிட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா அரசு பல புதிய அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

மேலும் இராணுவத்தினால் யாராவது கைது செய்யப்பட்டால் இவ்வாறு கைது செய்யப்பட்டதாகு இராணுவத்தினர் அத்தாட்சிப் பத்திரம் வழங்கவேண்டும். இந்த நடைமுறையை இராணுவத்தினர் மதிக்கமாட்டார்கள் என்று கருதப்படுகிறது. எனினும் இந்த ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று மனித உரிமைக்குழுக்கள் வலியுறுத்தி வருகின்றன.

மேலும் தனியார் நிறுவனங்களை பொறுப்பேற்க அத்தியாவசிய சேவை ஆணையாளருக்கு இருந்த அதிகாரமும் நீக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் மிக மிகக்குறைவே. முக்கியமான சட்டங்கள் மாற்றப்படவில்லை என மனித உரிமை குழுக்கள் கூறுகின்றன. உதாரணமாக ஓர் அரச அதிகாரி சட்ட ஒழுங்கை பராமரிக்கும் நடவடிக்கையில் உள்ள போது குற்றம் புரிந்தால் அவரைத் தண்டிக்க முடியாது. இந்தச் சட்டம் அப்படியே இருக்கிறது சடலங்களை அப்புறப்படுத்துவதில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என கூறப்படுகிறது. ஒருவர் ஆயுதப் போராட்டத்தின் போதோ அல்லது அரசுக்கு எதிராக போரிடும் போதோ உயிரிழந்தார் என்று பாதுகாப்புப் படையினர் கூறினால் மட்டுமே உயிரிழந்தவர் பற்றிய விசாரணை கைவிடப்படும் என கூறப்படுகிறது.

அண்ணா தி. மு. க. – இந்திரா காங்கிரஸ்

## பிளவை சீர்செய்ய டில்லியிலிருந்து தூதுவர்

(சென்னை)

அ தி. மு. க. - காங்கிரஸ் பிளவை சீர்செய்ய இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் பி வி. நரசிம்மராவின் சிறப்புத் தூதுவர்களாக வந்திருக்கும் ஓராவும், மத்திய நலத்துறை இணை அமைச்சர் கே வி. தங்கபாலுவும் சென்னையில் ஜி கே மூப்பனார் உட்படப் பல காங்கிரஸ் தலைவர்களை நேற்றுச் சந்தித்து ஆலோசனை கலந்தனர்

ஓராவும், தங்கபாலுவும் அனைத்து இந்திய அண்ணா தி. மு கழகப் பொதுச்செயலாளர் ஜெயலலிதாவை இன்று சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாகச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசிய ஓரா தமிழ்நாடுசட்டப் பேரவையில் நேற்றுமுன்தினம் நடந்த சம்பவங்களை அடுத்து இரு கட்சிகளுக்கிடையிலான உறவில் ஏற்பட்ட சிக்கலை சரி செய்ய முதலமைச்சரைக் கலந்து ஆலோசிக்க வேண்டியுள்ளது என்றார்.

கூட்டணியை முறித்துக் கொள்ள வேண்டும் என்று சில பிரிவுகள் கூறுவது பற்றி ஓரா கருத்துத் தெரிவிக்கையில்; நிலைமை முழுவதையும் ஆராயப் போவதாகவும், கூட்டணி தொடரும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஆரம்பவிழா

உதவிக் கல்விப் பணிப்பாளரும் தொலைக்கல்வித் துறை இணைப்பாளருமான திரு. துரை. தியாகராசா அவர்கள் யாழ். குடாநாட்டில் உள்ள பிராந்திய நிலையங்களில் நாளை முதல் பயிற்சி பெற ஆரம்பிக்கும் பயிலுநர் ஆசிரியர்களை வாழ்த்துகிறார்.

ஆரம்ப விஞ்ஞான கணித ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களாக பணி புரிந்தவர்கள் ஆசிரியர்களாக நியமனம் பெற்று பயிற்சிக்கு உட்படுகின்றார்கள். தெல்லிப்பழை தொலைக்கல்வி நிலையத்தின் ஆரம்ப விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு

ஜீவராசா, புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு) எனும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## மாணவர்

கான முத்திரைகளும் யாழ். செயலகம் எடுத்துவரப்பட்டுள்ளன. இருந்தும் யாழ். குடாநாட்டிற்கு அரசு போதிய அளவு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கும் பட்சத்திலேயே மேற்படி மூன்று மாதங்களுக்குமான மாணவ மதிய உணவு முத்திரைகளுக்கு பொருள்கள் விநியோகிக்க உள்ளதாக யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது.

## அரசின்

லாபம் கருதி நீதியற்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இவர்களை மக்கள் மன்னிக்கமாட்டார்கள் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

## துப்பாக்கி

இவ் அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விணணப்பப் படிவங்களைச் சகல காவல் பணிமனைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## 545 மாணவர்கள் தரையிலிருந்து கற்கும் அவலம்

(வடமராட்சி கிழக்கு)

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் ஆறு வகுப்புக்களில் உள்ள 545 மாணவர்கள் நிலத்திலிருந்து கல்விகற்று வருகின்றார்கள்.

நீண்டகாலமாக இப்பாடசாலையில் தளபாட பற்றாக்குறை நிலவிவருகின்றது.

அண்மைக்காலத்தில், மயிலிட்டி, காங்கேசன்துறை, திருமலை, ஆனையிறவு, வடமராட்சி கிழக்குஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பாடசாலைக்கு வந்ததையடுத்து, தளபாடபற்றாக்குறை மிகவும் மோசமடைந்துள்ளது.

அதேவேளை, இங்குள்ள மாணவர்கள் இருந்துகல்வி கற்பதற்கு 800 சதுர அடி கட்டடம் தேவையாகவிருக்கும் போது தற்போது 400 சதுர அடி கட்டடங்கள் மட்டுமே உள்ளன. (36)

## இடம் பெயர்ந்தோருக்கு வார இறுதியில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான ஜனவரி மாதத்தின் இறுதி இவ்வார கிழமைகளுக்கான உலர் உணவு விநியோகம் இல்லாத இறுதி நாட்களில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது

மேலும் இந்நிவாரண விநியோகத்திற்கான பொருள் பட்டியலை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தயாரித்து வருகின்றனர். இது தயாரித்து முடிந்ததும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் விநியோகித்து முடிந்ததும் இவ் வார இறுதிநாட்களில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகத்தினை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கும் எனவும் தெரிய வருகின்றது. (பா)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

துணுக்காய் பகுதி முன்னாள் சமாதான நீதிவான் திரு. வேலுப்பிள்ளை நடேசபிள்ளை 10 2 93 காலை துணுக்காயில் காலமானார் இவர் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், கதிர்காமநாதன், செல்வராஜசிங்கம் (லண்டன்), கமலாதேவி, தங்கமலர், மகேஸ்வரி, இராஜேஸ்வரி (கொழும்பு), சரோஜினிதேவி (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவமணிதேவி, லதா (லண்டன்), பொன்னையா, சிவஞானசுந்தரராஜா (ஜேர்மனி), கணபதிப்பிள்ளை, கமலேஸ்வரன் (கொழும்பு), சிவசேகரம் (லண்டன்), விஜயா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருந்தா (லண்டன்), அஜந்தா (லண்டன்), சஞ்சை (லண்டன்), சாரதா (லண்டன்), லலிதா (ஜேர்மனி), சுதன் (லண்டன்), பிரசாத் (கிளிநொச்சி), ராகவன் (சுவிஸ்), முரளி (லண்டன்), காண்டீபன் (லண்டன்), சதீஸ் (லண்டன்), ரமேஷ் (கனடா), சுரேஷ் (லண்டன்), பிரசாந் (லண்டன்), வினோத் (லண்டன்), யாழினி, தர்ஷனி, அகிலன், நிலாகினி, மிர்ணாளினி, சங்கீதா, கோபி, லோஜனா [யாழ்ப்பாணம்], மாலா, வாசுகி, பகீரதி, மார்த்தீபன் ஆகியோரின் அன்புப்பேரனும் நரேஷ் [ஜேர்மனி], சோபிகா [ஜேர்மனி] ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13. 02 93 சனிக்கிழமை பி.ப. 3 00 மணியளவில் துணுக்காய் இந்து மயானத்தி நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம.

தகவல்:-
பிள்ளைகள்

"கனகபவனம்"
துணுக்காய். [4263]

### ஆறுமுகம் தம்பிப்பிள்ளை

யாழ்ப்பாணம் கலட்டியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் தம்பிப்பிள்ளை [பெரியய்யா] நேற்றுக்காலை ஆறுமணியளவில் காலமானார். இவர் திருமதி தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும், நாகராசா, காலஞ்சென்ற திருமதி நாகபூசனிதேவி மாணிக்கராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தம்பிராசா, நடேசு, பாலு, செல்வத்துரை (அப்பா), தம்பித்துரை (கனடா), திருமதி றோசம்மா நற்குணசிங்கம், திருமதி இரத்தினம் தளையசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு. மாணிக்கராசா (பொறியியலாளர்) திருமதி பேபி சரோஜா நாகராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வன் பார்த்தீபன், துஸ்யந்தன், சுஜீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல் ;- த. நாகராசா (மகன்)
40/2 இராமநாதன் வீதி, அ. நற்குணசிங்கம் (சகலன்)
யாழ்ப்பாணம். (4262)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 11-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8263

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-1110, 42-6511, 26-8839, 27-2089, 27-6769, 27-4673, 43-2661, 26-6983, 26-9283, 26-2391, 22-3088, 24-4747, 26-5576, 24-1250, 28-1928, 27-3803, 24-5721, 24-6280, 42-0704.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

27-9764, 26-4501, 41-4719, 24-6699, 27 8754, 41-2509, 28 6640, 41-6933, 26-6461, 22-7271, 26-5244, 27-8999, 27-9492, 42-3239, 27-1637, 27-8160, 27-9707.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.